# விராலிமலைக் குறவஞ்சி

பதிப்பாளர்

**ஜெ. சந்திரிகா**

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

# விராலிமலைக் குறவஞ்சி

பதிப்பு

ஜெ. சந்திரிகா

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005
ஜூலை – 2007

சுவடியியலும் பதிப்பியலும்

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண் : 53010605

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

"**விராலிமலைக் குறவஞ்சி**" எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் '**சுவடியியலும் பதிப்பியலும்**' எனும் பட்டயப் பேற்றிற்காக **ஜெ. சந்திரிகா** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

**(வீ. அரசு)**

நாள் : 31-08-2007
இடம் : சென்னை -5

# பதிப்பாளர் உறுதிமொழி

**ஜெ. சந்திரிகா**
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப்பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

"சுவடியியலும் பதிப்பியலும்" எனும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் "விராலிமலைக் குறவஞ்சி" என்ற பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

(ஜெ. சந்திரிகா)

நாள் : 31-08-2007
இடம் : சென்னை -5

# உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| நன்றியுரை | |
| பதிப்புரை | |
| நூற்சிறப்பு | |
| விராலிமலைக் குறவஞ்சி | 1-66 |
| துணைநூற்பட்டியல் | 67 |
| பின்னிணைப்பு | |
| 1. செய்யுள் முதற்குறிப்பகராதி | 1-3 |
| 2. அருஞ்சொல்லகராதி | 4-5 |
| 3. குறவஞ்சி நூல்கள் - பட்டியல் | 6-9 |

# நன்றியுரை

நான் சுவடியியல் பட்டயப் படிப்பை மேற்கொள்வதற்குக் களமாக அமைந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையின் தலைவரும் இப்பட்டயப் படிப்பின் நெறியாளருமான பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு எனது நன்றியுடன் கூடிய வணக்கத்தைச் சமா்ப்பிக்கிறேன்.

சுவடியியல் பட்டய வகுப்பில் சுவடியைப் படிக்கவும் சீர் பிரித்து எழுதவும் பயிற்சி அளித்த முனைவர் ய.மணிகண்டன் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

நான் சுவடியிலிருந்து எழுதிச் சீர்பிரித்து, அச்சடித்த நகலைப் பிழைதிருத்தம் செய்தருளிய முனைவர் பூமிநாகநாதன் அவர்களுக்கும் எனது நன்றி.

இப்பதிப்புக்குத் தேவையான ஓலைச்சுவடியையும், அதன் கையெழுத்துப்பிரதியையும் தந்துதவிய சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு மிக்க நன்றி. விலைமதிப்பிட முடியாத சொத்தாகிய அரிய ஓலைச்சுவடிகளை நன்முறையில் பாதுகாத்து வருவதுடன் என் போன்ற மாணவர்கள் பதிப்பிக்கவும் உறுதுணையாக இருந்துவரும் அந்நிறுவனத்தின் காப்பாளர்க்கும் மற்ற ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

தமிழ் இலக்கியத்துறை மாணவி

**(ஜெ. சந்திரிகா)**

# பதிப்புரை

தமிழ் வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டில் பெரும் வழக்கத்திற்கு வந்த அச்சுக்கலையின் பரவல் தமிழ்ப் பதிப்புத்துறையில் பெரும் பங்கைச் செலுத்தியது. அதன் பயனாக இலக்கணம், இலக்கியம் (மூலம் / உரையுடன்) அகராதி, நிகண்டு, உரைநடை, கல்வெட்டு, செப்பேடு, பல்துறை நூல்கள் எனப் பலவாறு நூல்கள் ஏட்டிலிருந்து பதிப்புச் செய்யப்பெற்றிருக்கின்றன.

மொழிவளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கும் சுவடிப் பதிப்பித்தல் என்பது எளிதல்ல. அழகிய முன்னுரை, விளக்க உரைகள், ஆராய்ச்சிக் குறிப்புகள், பாடபேதங்கள், செய்யுள் முதற்குறிப்பகராதி, அருஞ்சொல்லகராதி, குறிப்புரை, பொழிப்புரை, நூல் வரலாறு, நூலாசிரியர் வரலாறு முதலிய திறனாய்வு நுட்பங்கள் கொண்டதாக ஒரு சிறந்த பதிப்பு அமைய வேண்டும்.

அரிய, கடினமான சுவடிகளைப் பதிப்பிக்க முனைதலில் முந்தைய காலகட்டத்தினர் ஆர்வம் காட்டியதுடன் அவற்றைச் செம்பதிப்பாகக் கொண்டுவருவதற்கும் உழைத்தனர். ஓரளவு எளிமையானவற்றையே, அதிலும் தாள்சுவடியையே பதிப்பிக்க இன்றைய தலைமுறையினர் முன்வருகின்றனர். ஏனெனில், போதிய புலமை, பயிற்சி - அனுபவமின்மை, பல ஏட்டுப்பிரதிகள் கிடைக்காமை, ஏடு விடுபாடு - பூச்சியரித்தல் - ஒடிவு முதலியனவற்றால் நல்ல ஓலையாக அமையாமை, பிழை மலிவு, ஈடுபாடின்மை முதலியனவற்றால் அவர்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தொடக்காலப் பதிப்புகளில் பெரும்பான்மையாக வெளிப்படும் திறன், தேர்ச்சி, ஆய்வுநோக்கு - இன்றைய

பதிப்புகளில் காணல் அருமை. இருப்பினும் 1980 முதல் 1996 வரையிலான காலகட்டத்தில் எந்தச் சுவடிப்பதிப்பு நூலும் வெளிவராத நிலையினைப் பார்க்கும்பொழுது ஆய்வுப்பட்டங்கள், பட்டயங்களுக்காகவேனும் இன்று பரவலாகப் பதிப்புகள் உருவாகின்றன என்று ஓரளவு திருப்தி கொள்ளமுடிகிறது. அவ்வகையில் இந்நூலும் சுவடிப்பட்டயத்திற்காகப் பதிப்பிக்கப்பட்டது.

ஓலைச்சுவடி எண் R. 5731, TR. 2200 என்பதையும் அதன் கையெழுத்துப் பிரதி எண் R. 5033, TR. 1049 என்பதையும் ஒப்புநோக்கி **'விராலிமலைக் குறவஞ்சி'** என்னும் இந்நூல் பதிப்பிக்கப்படுகிறது. 14.5 X 1 இன்ச் அளவிலான இவ்வோலையின் பல இடங்களில் பூச்சி அரித்தும் உடைந்தும் உள்ளன. நூல் நிறைவு பெற்றுள்ளது. 32 ஏடுகள் இருந்தன. ஒவ்வொரு பக்கத்திலும் 7 வரிகள் எழுதப்பட்டுள்ளன. இதனைப் பாடியவர் **செவ்வூர் வடுமு வைத்யலிங்கக் கவிராயர்** என்பவர். இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் புலப்படவில்லை. 30.10.1955 அன்று இதன் கையெழுத்துப்பிரதி எழுதப்பட்டுள்ளது. இவ்வோலையைச் சென்னைப்பல்கலைக்கழகக் கீழ்த்திசை சுவடியியல் நூலகத்திற்கு வழங்கியவர் சிங்காரவேலு கவிராயர் என்பவராவார். இவர் திருச்சி மாவட்டம் மிதிலைப்பட்டியைச் சேர்ந்தவர்.

குறவஞ்சி வகையைச் சேர்ந்த நூல் என்பதால், விருத்தம், அகவல், வெண்பா, கொச்சகம், கலிப்பா, தரவு, சிந்து முதலிய பாவகைகளுடன், தருக்களும் விரவி வந்துள்ளன. எண்பது பாடல்கள் இதில் உள்ளன. அவற்றுள், பன்னிரண்டு பாடல்களில் ஓலை அரிப்பினால் அறிந்துகொள்ள இயலாதவாறு சில அடிகளும் சில வார்த்தைகளும் விடுபட்டுள்ளன. ஆயினும் பொருள் தொடர்ச்சி சரிவர அமையப்பெற்றுள்ளது.

சுவடிகள் விவரஅட்டவணையிலும் (catalogu) கையெழுத்துப் பிரதியிலும் **‘விராலிமலைக் குறவஞ்சி’** என்றுள்ளது. ஓலைச்சுவடியின் மேற்புறமும் **‘விராலிமலைக் குறவஞ்சி’** என்றுள்ளது. ஆனால், உள்ளே நூல் தொடக்கத்திற்கு முன், **‘செவ்வூர் வடுமு வைத்யலிங்க கவிராயர் இயற்றிய விராலிமலை சுப்பிரமணிய ஸ்வாமி பேரில் குறவஞ்சி’** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாட்டுடைத் தலைவன் பெயராலோ, அல்லது தலத்தின் பெயராலோ தலைப்பிடல் குறவஞ்சியின் மரபு. ஆகையால் **‘விராலிமலைக் குறவஞ்சி’** என்ற தலைப்பே இந்நூலுக்குத் தரப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# நூற்சிறப்பு

தொன்மை இலக்கியங்களில் சிறப்புக்குரிய இலக்கியமே கால ஓட்டத்தை எதிர்த்து நின்று நிலைபெற்றுள்ளது. சிறப்பில்லா இலக்கியம் பட்டுப்போயுள்ளது. சிறப்புக்குரிய இலக்கியமானால் அந்த ஓலைச்சுவடியைப் பலரும் படியெடுத்துப் போற்றித் தங்கள் வீடுகளில் வைத்துக்கொள்வர். அது பிற்கால மக்களுக்குக் கிட்டும். சிறப்பில்லா நூலானால் எவ்வளவு தொன்மையாக இருந்தாலும் ஓலைச்சுவடிகளில் படியெடுத்து வைக்கும் மரபு அந்தக்காலத்தில் இல்லை. **'விராலிமலைக் குறவஞ்சி'** என்னும் இவ்வோலைச்சுவடி பாதுகாக்கப்பட்டு இன்று நம் கைக்குக் கிடைத்திருப்பதே இதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் நன்கு புலப்படுத்துகிறது.

குறவஞ்சியின் பொது அமைப்புகளான, கட்டியக்காரன் வருகை, கட்டியக்காரன், பாட்டுடைத் தலைவன் பவனி வருகையை அறிமுகப்படுத்தல், பாட்டுடைத் தலைவன் பவனி வருதல், பவனி வந்த தலைவனை மோகினி காமுறுதல், மயங்கிய மோகினி, சந்திரன், தென்றல் முதலியவற்றை நிந்தித்தல், பாங்கி மோகினியின் நிலைகண்டு அவளை உசாவுதல், தலைவி பாங்கிக்கு உற்றது உரைத்தல், குறத்தி வருதல், தலைவி, குறத்தியை மலைவளம் முதலியன பற்றி வினாதல், குறத்தி, தனது மலைவளம், நாட்டுவளம் முதலியன கூறல், தலைவி, குறத்தியிடம் குறி கேட்டல், குறத்தி தலைவிக்குக் குறி கூறல், தலைவி, குறத்திக்குப் பரிசு வழங்கல், குறவன் வருகை, பறவைகள் பிடித்தல், குறவன், குறத்தியைக் காணாது தேடுதல், குறவன் குறத்தியின் அடையாளத்தைக் கூறல், குறவன் - குறத்தி சந்தித்தல், குறவன் குறத்தியிடம் உள்ள அணிகலன்கள்' எப்படி வந்தன என வினாதல், குறத்தி, குறவன் வினாக்களுக்கு விடைகூறல், குறவன் - குறத்தி இருவரும் அகமகிழ்ந்து இணைதல்

முதலியன இந்நூலில் பொருந்தியுள்ளன. ஆயின், இதில் குறவன் நண்பனிடம் பேசுவதாகவோ, இருவரும் சேர்ந்து பறவைகள் பிடிப்பதாகவோ, சிங்கியைத் தேடும்படி கூறுவதாகவோ ஆசிரியர் எடுத்துக்காட்டவில்லை. சிங்கன் தானே கூறிக்கொள்வது போல் அமைத்துப் படிப்பவர் ஊகத்துக்கு விட்டுவிடுகிறார்.

நூல் யார் மீது பாடப்படுகிறது என்பதையும் நூலின் தன்மையையும் தொட்டுக்காட்டும் பாடலான தோடையம் என்பது இந்நூலில் காப்புப் பாடலுக்கு அடுத்து வருகிறது. செயசெய என்ற சொல்லாட்சி இதில் வருகிறது. வசனம் நாடக மாந்தர் கூற்றாக அமைக்கப்பட்டுள்ளது.

யெதுகுல காம்போதி, மோகனம், ஆனந்த பைரவி, மத்திமாவதி, மமோபதி முதலிய இராகங்கள் இந்நூற் பாடல்களில் அமைந்துள்ளன.

பாங்கிதரு, மோகினிதரு, நிலவுத்தரு, தென்றல்தரு, குயில் தரு, கடல்தரு, மன்மதன்தரு, திரைத்தரு, வாசல்தரு, கண்ணிதரு, ஏசல்தரு முதலிய தருக்கள் இக்குறவஞ்சியில் வந்துள்ளன. வெளித்தரு, களித்தரு, நாட்டியத்தரு என்னும் குறவஞ்சிக்கேயுரிய தருக்கள் இந்நூலில் வேறுதரு என்ற பெயரில் இடம்பெற்றுள்ளன.

குறவஞ்சி இலக்கியத்திற்கேயுரிய **கொச்சைத் தொடர்கள்** மற்றும் **வழக்குச் சொற்கள்** இந்நூலில் விரவியுள்ளன. அவை பின்வருமாறு :

கெம்பாடய்யே, சிக்கிச்சடய்யே, பேசாரையே, போயினுமையே, வருகினுமையே, மெய்யினுமய்யே, சேருதய்யே,கண்டநடய்யே,நானடய்யே,கேளுங்கடய்யே, கேளீரம்மே, மரியாதி (மரியாதை), மதப்பயல், கும்புகும்பாகவே,

கொள்ளைக் கொள்ளையாக, சட்டாவாய், சபாசி, தீராட்டம், மொண்ணை மூக்கு, பருசம் (பரிசம்), உருமையாய் (உரிமையாய்), போறது, உசந்த, ஒசத்தி, சிறுக்கி, சிக்குது.

குறத்தி கண்டதாகக் கூறும் தேசங்கள் பின்வருமாறு :

1. வடகாசி, 2. வங்காளம் (ஈராறு) 3. மலையாளம் (ஏழு), 4. மாகதம், 5. கச்சி, 6. கபாடம், 7. கொங்கம், 8. குடகம், 9.துருவம், 10. சீனம், 11. குலிங்கம், 12. விலாடம், 13. சிங்களம், 14. ஈழவம், 15. சாழுவம், 16. கங்கம், 17. துளுவம், 18. கேசயம், 19. கண்டி, 20. திரிகூடம், 21. கலிங்கம், 22. விராடம், 23. கொச்சி, 24. கர்நாடகம், 25. இந்துஸ்தானம், 26. துலுக்கானம், 27. கேரளம், 28. சிந்து, 29. டில்லி (திராவிடம்) 30. கொல்லம்.

குறத்தி சென்று வந்ததாகக் கூறும் தெய்வஸ்தலங்களாவன:

1. சீரங்கம், 2. திருவானைக்காவல், 3. சிராபள்ளி, 4. திருவாடுதுறை, 5. கண்ணபுரம், 6. திருவையாறு, 7. கண்டியூர், 8. குடந்தை, 9. மத்தியார்ச்சுனம், 10. சிதம்பரம், 11. சீகாழி, 12. பேரம்பலம் (சிதம்பரம்) 13. திருக்குத்தாலம், 14. வேங்கிடம், 15. காஞ்சீபுரம், 16. பேரூர், 17. திருவாரூர், 18. வேளூர், 19. மறைக்காடு, 20. பெருந்துறை, 21. செங்காட்டங்குடி, 22. மன்னார்கோயில், 23. திருவெண்காடு, 24. நாவலூர், 25. மாயூரம், 26. திருவிடைமருதூர், 27. திருவாடனை, 28. ராமேசுரம், 29. உத்திரகோசமங்கை, 30. திருச்செந்தூர், 31. தென்காசி, 32. கூடல், 33. திருக்கோட்டியூர், 34. திருவேட்கம், 35. திருக்கழுக்குன்றம், 36. ஆவினங்குடி, 37. வடகாசி, 38. அண்ணாமலை, 39. கருவூர், 40. கடம்பர்கோயில், 41. வயலூர்.

கங்கை, யமுனை, கிருஷ்ணவேணி, சரசுவதி, துங்கபத்திரை, கோதாவரி, சொர்ணபத்திரை, காவேரி, சிந்து, மணிமுத்தாறு, பெண்ணை, நர்மதா, கெவுரி, தாம்பிரபரணி, வைகை, அமராவதி, சண்முகநதி முதலிய நதிகளின் பெயர்கள் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சித்தி வினாயகர், வீரவாகுதேவர், கருப்பன், வீரபத்திரன், நாச்சியம்மாள், ஜய்யனார், காரி, மீனாட்சி, காந்திமதி, சிவகாமி, அங்கயற்கண்ணி, காமாட்சி, விசாலாட்சி, மட்டுவார் குழலி, செல்லாண்டி, மாகாளி, மாரி, பெரியநாயகி, பிடாரி, வள்ளி, தெய்வானை, மாமுனி, திருப்பாண்டி ஈஸ்வரர், விராலூர்ப்பதி ஈஸ்வரர், வைரவன் முதலிய தெய்வங்களை வேண்டிக்கொண்டு குறத்தி குறிப்பார்க்கத் தொடங்குவதைக் காணமுடிகிறது.

குறச்சாதி வித்தைகளாகக் குறத்தி குறிப்பன :

1. ஆனைகளைப் பிடித்துக் கரகத்தில் அடைத்தல்
2. சிங்கத்தைக் குரங்காட்டச் செய்தல்
3. பூனையைப் புலிவடிவாக்குதல்
4. புலியைப் பூனைபோல் இருக்க வைத்தல்
5. மானைப் பிடித்து இடையில் கட்டுவோம்
6. கரடியாட்டத்தைக் கண்டு மகிழ்தல்
7. மரப்பாவையைச் சிரிக்க வைத்தல்
8. எட்டிக்காயை மாங்கனியாக்குதல்
9. இரும்பையும் செம்பையும் தங்கமாக்குதல்
10. தண்ணிக்குள் சென்று சோறு சமைத்தல்
11. தண்ணீரில் கல் மிதக்க வைத்தல்
12. அக்கினியில் ஏறி நடத்தல்
13. புவியை அரைக்கணத்தில் வலம்வருதல்

இந்நூலில் சிலபாடலடிகளில், **புராணக்கதைக் கூறுகள்** சொல்லப்பட்டுள்ளன. அவையாவன :

1. பாற்கடலில் பெண்ணுடனே தீர்க்கமுடன் பிறந்திருந்தும் பாவையரைக் காய்வதுண்டோ நிலவே? (பா:16, அடி:1-2)

2. மேரு வலமாக வரும்போது தனஞ்செயனால் உன் மேனி அனல் ரூபமாச்சோ நிலவே? (பா:16, அடி:5-6)

3. சீருலவும் அரனுதலில் மேவும்விழி மேலிருந்த தீர்க்கமதால் காயுறாயோ நிலவே? (பா:16, அடி:7-8)

4. ஆகமரூபியாய்ப் போயும் உனக்கென்ன மன்மதா ஆன்மிக்கையேன் சும்மானுக்கு அலைகிறாய்? (பா:24, அடி:3-4)

5. அன்னமே, நான் சொன்னபடி கேளும் வாருமந்த தமயந்தியுடன் சென்றுரைத்த அன்பாய்ப் பாரும். (பா:25, அடி:1-2)

6. வெள்ளிமலையீசர் தன் சாதியை விளங்கின போர்தந்த ஈஸ்வரனார் உள்ளபடியுங்களுடை சாதி உச்சிதமென்று மழுவெடுத்தார். (பா:38, அடி:3)

7. மானே வடிவேலவர்க்கு நாங்களும் மாதைக் கொடுத்த வகைகேளும் காரணந்தனிலே வலியவந்து கைக்கொண்டா ரெங்கள் கலைக்கன்னியை. (பா:38, அடி:9-10)

பொதுவாகக் குறவஞ்சி இலக்கியங்களில் குறத்தி, 'கணவனைத் தவிர வேறு எவரையும் நினைக்கமாட்டோம்' என்று பெருமையாகக் கூறுவதாக இருக்கும். அவற்றில் ஒருசில விதிவிலக்குப் பெற்றவை. அப்படிப்பட்டதில் இக்குறவஞ்சியும் அடங்கும்.

"கணவனிருக்கச் சிறியகொழுநன் சேரப்பொருந்துவோம்"

என்ற பாடலடியின் மூலம், "கணவனின் உடன்பிறந்தானைப் புணரும் இயல்பு உள்ளவர்கள் குறத்தியர்" என்னும் செய்தியை அறிந்துகொள்ள முடிகிறது.

உயர்தட்டு மக்கள் காதலைத் தலைவன் - தலைவி வாயிலாகவும் கீழ்தட்டு மக்கள் காதலைக் குறவன் - குறத்தி வாயிலாகவும் உணர்த்துவது குறவஞ்சி இலக்கியம்.

ஒருதலையாக நின்று ஏங்கும் தலைவியின் தூய காதலையும் இருதலையாக நின்று மகிழும் குறவன் குறத்தியின் காதலையும் ஒருங்கே பாடுவது குறவஞ்சி நாடகம்.

சங்க இலக்கியத்தில் வந்த ஊடல், கூடல் மரபுகள் குறவஞ்சியில் எளிமையாக்கம் செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு பலவித சிறப்புகள் பொருந்திய ஒரு சிறந்த இலக்கியமாக விராலிமலை சுப்பிரமணிய ஸ்வாமி பேரில் இயற்றப்பட்ட குறவஞ்சி இலக்கியம் அழகுற அமைந்துள்ளது.

☸ ♐ ☸ ♐ ☸

# விராலிமலைக் குறவஞ்சி

செவ்வூர் வடுமு வைத்யலிங்க கவிராயர்
இயற்றிய

# விராலிமலை சுப்ரமணிய ஸ்வாமி பேரில் குறவஞ்சி

வேதமா முனிவோர் சூழும்
விராலியங் கிரியில் மேவும்
தாதவிழ் கடப்ப மாலை
தரித்த சண்முக வர்மீதில்
சோதினைக் குறிகள் சொல்லும்
துறைக்குற வஞ்சி கூற
ஆதர வாக வந்து
ஐங்கரன் காப்புத் தானே. (1)

கங்கையு மழுவு மானுங்
கலைமதி அரவுஞ் சூடும்
மங்கை யோர்பாகர் ஈன்ற
வளர்முரு கேசர் மீதில்
கொங்கை சிங்கார மானக்
குறவஞ்சிப் பிரபந்தங் கூற
ஐங்கரன் விமலன் மாயன்
அடியிணைக் காப்புத் தானே. (2)

தருவுயரும் விராலிகிரி தனில்வளரும் வேலவர்மேல்
மருவுயருங் கொங்கைகுற வஞ்சிதன்னைக் - கூறச்
கறைபுகழுங் கைலாசர் அருள்பெருகும் வடிவுடைய
கரியமத முடையதொந்திக் கணபதிதாழ் துணையே.
செயசெய (3)

தேசம்புகழ் விராலிகிரி செழிக்கும்வடி வேலவர்மேல்
வாசமிகுங் கொங்கைகுற வஞ்சிதனைக் - கூற
நேசமிகு தேவியுமை ஆசையுட னேமருவும்
ஈசர்சூரி யமுதுண்டாய் திருவடிகளென் னருந்துணையே.
செயசெய. (4)

பத்தர்தொழும் விராலிகிரி யுற்றவடி வேலவர்மேல்
நற்றமிழ்சேர் குறவஞ்சி நாடகத்தைக் - கூறச்
சத்திய களத்துசிவ சத்தியுடை மௌநத்தி
பாசத்திரு வடிகள் நிதமுந்தான் துணையே.
செயசெய. (5)

தவமுனிவோர் சூழ்விராலி தன்னில் வளரும் வேலவர்மேல்
நவமணிசேர் குறவஞ்சி நாடகத்தைக்கூற - புவனமகிழ்
திருவுறையும் புயலழகர் மலரடியும் பவமகற்றும்
வீர வாகு பதம்நிதமுந் துணையே.
செயசெய. (6)

## மங்களம்

மயிலடி வேலனுக்கு மங்களம் - விராலி
மலையி லனுகூலனுக்கு மங்களம்
சுந்தரஞ்சேர் மார்பனுக்குந்
துலங்கிய பிரதாபனுக்கு
மந்திர சுரூபனுக்கு
மால் மருகனுக்கு மங்களம்

பங்கய பொந்தாளனுக்கு
பன்னிருகை யாழனுக்கு
மங்கைவள்ளி மணாளனுக்கு மங்களம்
வளர்புகழ்சேர் கந்தனுக்கு மங்களம்.

மயிலடி வேலனுக்கு மங்களம் - விராலி
மலைமுரு கேசனுக்கு மங்களம்
துங்கமயில் வாசனுக்குஞ்
சூரரைவென்ற நேசனுக்கு
மங்கை வள்ளி பாகனுக்கும்
வானத்தந்தி போகனுக்கும்
பொங்குபுகழ் வீரனுக்கும்
புனைகடப் பந்தா ரனுக்குஞ்
சங்கைவடி வேலனுக்கும்
திருமுரு கேசனுக்கு மங்களம் - நாளும்
சிவனருள் குமாரனுக்கு மங்களம். (7)

மங்களம் முற்றும்

## அகவல்

மணிபுனை மார்பன் மகிழும் பிரதாபன்
துணைமல ரடியான் துலங்குபொன் முடியான்
பூவல குள்ளோர் போற்றிசை கிறைஞ்ச
தேவர்கள் துதிக்கும் தேவாதி தேவன்
சீர்பெரு வளமை செழிக்கும் மைந்தருவும்
பேர்பெற விளங்க பெருபுக ழோங்க
களைபெறு வேங்கையுந் தளைபெரு வேங்கையும்
ஓங்கிய கானுந் தூங்கிய தேனும்
மேவிய நரகமும் தாவிய நாகமும்
துலங்கு மான்மறையும் இலங்கு தாமரையும்

நலமிகு வரியும் பலமிகு கரியுஞ்
சீறிய அரவமும் மீறிய அரவமும்
சந்தனக் காவும் ஐந்தருக் காவும்
மருமலர் ஓடையும் பரிமள வாடையும்
மலருரை அளிகளும் நலமுறு கிழிகளும்
கூவிய குயிலும் தாவிய மயிலும்
மஞ்சுகம் தவழும் வரிசையே இலங்க
மிஞ்சிய வேத மெத்தவுந் துலங்க
அருந்தவ முனிவோர் அன்புடன் வளர
பொருந்தவ னேக புதுமைகள் சேர
ஒழிவுறு முடிதறித் துற்ற தினாலும்
அழகுறு மதிக்குடை அசைத்த தினாலும்
பூவையுஞ் சுகமும் பொருந்திய பட்சம்
காவினில் மலர்கள் கதித்த தினாலும்
சுரும்புட னிருளும் துலங்கிய கயலும்
கரும்புகள் வளர்ந்தது கதித்த தினாலும்

தேவ கன்னியர்கள் சிறப்புடன் சூழ
யாவரும் மயங்கி அன்புடன் பணிய
இத்தனை விதமும் இயல்புற் றதினால்
சித்தசன் போல செழித்துமே லோங்கி
அண்டமுந் தாண்டி அப்பால் வளர்ந்து
விண்டலத் துள்ளோர் விரும்பியே பணிய
தார்தலந் துதிக்க தர்மமே செழிக்கும்
விராலிமா மலையான் வேதமார் கலையான்
சிவனுடை முடிமேல் சிறந்திடு கங்கை
புவனமீ துற்ற புலன்கிரி பிளந்து
மாதரைப் புகுந்து மண்டியே நடந்து
போதவே மிகுந்து பொங்கியே வழிந்து
வாவிகள் நிறைந்து மருமலர் சொரிந்த
காவுபுகழ் தோறுங் கலந்துநீர் பரந்து

மல்லிகை பிட்சி மருவுடன் துளப
முல்லை செண்பகமும் அண்ட கமலமுஞ்
சேரவும் வாரித் திரண்டொரு முகமாய்
வாரநீர் விசையில் மலரிடு பாலுஞ்
சேந்து மாளிகை போல்சிறப்பு டனழகாய்ப்
பொருந்திய இன்பம் பொருந்திய மகரம்
தத்தியே பாயத் தனிலெதிர் சங்கின்
முத்துக ளுடனே முளரி முத்துதிர
நாக மணியும் நவமணி விளையும்
யோகமா முனிவோ ருகந்துநீ ராட
சத்த ரிஷிகளும் சத்த கன்னியரும்
நித்தமும் வந்து நீர்விளை யாட
தேவாதி தேவர் தினமும்நீ ராட
பூவுல குள்ளோர் புகழ்ந்துநீ ராட
தவமிக பெருக்கி சந்தத் தம்பம்
பாவங் களைத்தீர்த்துப் பதங்களைக் கொடுக்கும்
மின்னார் திரைகள் மேவியே நிரையும்
பொன்னின் மானதியான் புகழ்பெரு பதியான்
மந்திரி கள்கோடி வந்துமே கூடி
சந்திர மண்டபத்தா லோசனை செய்ய
தழந்திடு புன்னை தன்னிலே தாவி
வளர்கமு கெறிமாவி னில்மேவி
சிந்தையின் களிப்பாய் தேங்கினி லுகந்து
அந்தர லாதிகள் அன்புடன் போட

கோங்கிள நீர்கள் சிதறியே வீழ்ந்து
மாங்கனி உதிர்ந்து வளமிகு பலாவின்
கனிதனை யுடைத்துக் கதலியைத் தகர்த்து
இனிதுறு கனியினிர சங்கள் புகவழிந்து
வாவியின் நிறைந்து மடைவழிப் புகுந்து
மேவிய பழனமீ தெல்லாம் பரந்து

இஞ்சியுஞ் சென்னலும் இதம்பெற வளர
மஞ்சளும் கன்னலும் வளர்ந்துமே லோங்க
காவினில் வண்டு பூவித முண்டு
பொருந்து மஞ்சுகமும் பூவையும் பாடத்
திருந்திய மயில்கள் சிறைவிரித் தாட
வரிக்குயில் கூவி வளரவு மன்மை
பெருக்க லனேகம் பிறபல முடனே
புராதன மாகப்பொருந்தியே செழித்த
விராலிநன் னாடன் மிகுந்த விஸ்தாரன்

திருவுறை மாடமுஞ் சித்திரக்கூடமும்
மருமலர் வாடையும் வளர்மணி மேடையும்
மின்னு சாளரமும் விழுங்குமா மதிலும்
பொன்னணி சிகிரி பொருந்து மலையமுஞ்
செந்தமிழ் பெருக்கமும் ஐந்தரு நெருக்கமுஞ்
சதுர்மறை வாணரும் முதிர்தமிழ் வாணரும்
அனந்தரு மடமும் மனந்தனில் திடமும்
பெருந்தவ மீது மருந்தவத் தோருந்
துலங்கு வாரணமும் இலங்கு தோரணமும்
ஆடையா பரணம் அழகுடன் இலங்க
மேடைமேல் மஞ்ச மீதினில் மடவார்
ஆடவர் தன்னை அன்புடன் சேர்ந்து
கூடியே நித்தங் குணமுடன் வளர
மங்களா காரம் வளம்பெறச் சிறக்கத்
திங்களும் மாரி தினமுமே பொழிய
இதம்பெறச் சகலரும் இன்பமாய் மகிழ்ந்து
விதம்பெறு செல்வம் விராலிநன்ன காரன்
பெருமையே சிறக்கப் பிறபல முடனே
மருவுரு கடப்ப மாலிகை தரித்தோன்
கடினமே மிகுத்து துடினமாய் நடந்து
மிஞ்சுகுதி கொண்டு அஞ்சுகெதி கொண்டு

திடமாக வலசாரி இடசாரி மிகமீறி
நன்று களதை யோடுதின்று கொளுத்தபூனை
தங்கை தமக்கு சீசியென்று விரட்டுதோசி
உடவுசெருப்பு நூறு நெடிய சவுக்குநூறு
மிதியடி ..........................................................
இதவான குணமாக அதிவேக மெனநாடி
மிகுமண்ட கூடமு கடண்ட எமனும்
தத்தியே எழுந்து தரியலார் கலங்க
வத்தியே செறிந்த விசையவாம் பரியான்
மதமுடன் பொருப்பை மருப்பினால் குத்தி
அதிரவும் இடித்து அள்ளியே விசிறி
சத்தமிகுந் தொருமித்து நடந்துறு
பத்தலர் தங்கள் சிரத்தை வளைந்து
பிடித்து முறுக்கி அடிக்குள் நொறுக்கி
மிதித்து மனம்கற் கதித்து நடந்து
செம்மை யாய்வந்த செருநரைத் தாக்கி
மும்மத மீறி முழங்கு குஞ்சரத்தான்
இஷ்டமாய்த் தேவர் யாவரும் போற்றத்
திட்டமாய் வளருஞ் சேவலங் கொடியான்

மேள வாத்தியமும் விளங்கு பூரிகையும்
தாள மத்தளமும் தவிலுடன் பிடியும்
ஊதிய சங்கும் உகந்த பேரிகையும்
மூதண்ட கூட முழங்குமும் முரசான்
ஏற்கையாய் வளரும் ஈரேழு லோகமும்
ஆக்கினா சக்கிரத் தடங்கவே செலுத்தும்
தோகைமா மயிலான் சூர்தணக் கடிந்து
வேகமா மீளும் வெற்றிவே லுடையான்
குஞ்சரி வெள்ளி குணமுடன் சேர்ந்த
மிஞ்சியாய்த் தான்வேத மந்திரத் தான்
தரைபுகழ் கந்தன் ஷண்முக வேலன்

அரனருள் மைந்தன் அறுமுக வேலன்
வானவர் போற்ற வளர்முரு கேசன்
மனமகிழ் வாய்த்திரு மஞ்சன மாடி
கானபெறு கலிங்கங் களையுடன் தரித்து
பூசிய கந்தம் புழுகு சவ்வாது
வாசனை சேரும் மருமலர் சூடி
அன்புடன் மிக்க அமுது கொண்டருளி
இன்பமா யடைக்காய் இயல்புடன் தரித்து
மாணிக்கஞ் சிறந்த மகுடமுந் துலங்க
ஆணிப்பொன் சேர்ந்த அணி வயிடூரியக்
கடுக்கறும் பச்சை கபாயுடன் தரித்து
தொடுத்திடும் அங்கி சுகமுடன் தரித்து

பத்தரை மாத்து பசும்பொன் னாபரணமும்
இத்தல மெங்கும் இசைந்திடு பதக்கமும்
முத்து வாயும் மோகன மாலையும்
மெத்த வனேக விதப்பணி தரித்து
மல்லிகை கடப்ப மாலிகை யுடனே
முல்லை மாலிகையு முழரியுந் தரித்து
மயில் தனிலேறி வாகுபன் கரத்தில்
அயில்களுந் துலங்க அழகு ருதிராட்ச
குடையுடன் மற்றக் குண்டகமுஞ் சூழ
வடிவுறு சேவல் வளர்கொடி யுடனே
பொன்னாறு வட்டம் பொருந்திமுன் னடைக்க
மின்னணி சின்னம் விருதுமுன் னடைக்க
மிகுந்திடு முரசு விதம்பெற முழங்க
உகந்தவெண் சாமரை உபையமும் வீச
தேவர்கள் முனிவோர் சிறப்புடன் சூழ
பூவையர் நடனம் புரிந்துமுன் னடைக்க
அனநடை மாதர் ஆலத்தி ஏந்த
தனமிகு மடவார் சங்கீதம் பாட

அந்தணர் வேதம் அகமகிழ்ந் துரைக்கச்
செந்தமிழ் வாணர் சீறுரை கூற
மட்டுக றில்லா வளமை களுடனே
இஷ்டப் பவுளி யியல்புது மறுகில்
வந்தது கண்டு வாலமோ கினியாள்
சிந்தையும் மயங்கித் தியங்கியே மையல்
மீறிய போதில் விண்மதி காயச்
சீறியே வந்து தென்றலும் பாய
மாங்குயில் கூவ மதன்கணை தாவ
ஏங்கியே கனலில் ஏற்றியே மெழுகா
உள்ளமும் மெத்த உருகியே வாடி
மெள்ள வஞ்சகியை விதமுட னணைத்து
வருந்துய ருரைக்க வண்மைசேர் பாங்கி
பொருந்தியே இன்ன புதுமையென் றறிந்து
ஆசையே மீறும் ஆடவ னிடத்தில்
நேசமாய் மாலை நிசமுடன் வாங்கி
வருகிறேன் உந்தன் மனத்துயர் தீர

உரிமையாய் மனதின் உற்றிடு கருமங்
கண்டது போலக் கருத்துடன் உரைக்க
வண்டணி கூந்தல் வளர்குற மாதை
அழைத்துவா றேனென்று அறிவுடன் பாங்கி
தளைத்திடும் குறத்தி தன்னையே தேடிக்
குணமுடன் குறவர் குடில்தனை நாடி
மணமிகும் விராலி மலைதனில் சென்று
குறத்தியைக் கண்டு கூட்டி வந்ததுவு,
சிறக்கவுங் குறத்தி தெய்வத்தை வேண்டி
மனதினில் நினைத்த வகையெலாம் சொல்லி
தனதுடார் வரிசைகள் தான்பெற்ற வாறு
சிங்கனு வேட்டை திறமுடன் நாடி
சிங்கியைத் தேடித் தியங்கிய போதில்

வந்திடக் கண்டு வார்த்தைகள் பேசி
சொந்தமா இருவோர் சுகமுடன் சேர்ந்து
இருவருங் கூடி இணங்கி நன்றாக
மருவிவாழ்ந் ததுவும் வாய்மை யதாக
நலந்திகழ் குழுமூர் நகர்தனில் கங்கை
குலந்தனில் வந்த குழந்தை வேலய்யன்
தருமர் தவத்தில் தளைத்திடும் பிள்ளைப்
பெருமாள் உகந்து பிறபல முடனே
கூறிய இன்பக் குறவஞ்சி தன்னில்
விராதியி லேங்கி யிருந்திருந் தாலுஞ்
சீறுடன் முத்தமிழ் சேர்ந்திடும் புலவோர்
பேர்பெறச் செய்யும் பெருமைகள் அவர்க்கே.

(8)

அகவல் முற்றும்

## கட்டியக்காரன் வருகை

### விருத்தம்

துய்யவெண் ணீறு பூசித்
துலங்கவே பாகு கட்டி
மெய்தனில் பணியும் பூண்டு
விதமுடன் சோமன் கட்டி
வையகம் புகழ் விராலி
மலைவடி வேலர் முன்னே
கைதனில் பிரம்பு மின்ன
கட்டியக் காரன் வந்தான். (9)

## விராலிமலை வேலவர் பவனி

அண்டந் தொழவே புகழ் கொண்டாட பராக்கு
அற்புத மிகுந்த சிங்கார பராக்குத்
தொண்டருக் கன்புதருந் தூயா பராக்குத்
துலங்கிய வினாயகன் துணைவா பராக்கு
வாசமலர் சூடுமுத் தய்யா பராக்கு
வள்ளிபுய மேவுமண வாளா பராக்கு
சீலரும் யீராறு கைய்யா பராக்கு
விதமான மயிலேறும் வீரா பராக்கு
மாது குஞ்சரி மருவுநீதா பராக்கு
மாகநவமணி வச்சிர மார்பா பராக்கு
வேதமே வியசத்தி பாலா பராக்கு
விண்ணவர்கள் துதிசெய்யும் வேலா பராக்கு. (10)

## பாங்கி வருகை

### விருத்தம்

கருனகையின் னாடை கட்டித்
தரித்தபூ ஷணங்கள் மின்ன
முருகவிழ் மாலை சூடி
முகமலர்ந் தின்ப மாக
மருவுயர் விராலி வேலர்
மகிழ்வுறு கொலுமுன் பாக
பருவயிங் கிதமாய்ச் சொல்லும்
பாங்கியும் தோன்றி னாளே. (11)

# பாங்கி வருணனை

## பாங்கிதரு

மோகனப் பாங்கியும் வந்தாள் சைய்
யோகமாக மோகனப் பாங்கியும் வந்தாள்
நாகரீகர் விராலி நாதர்மேல்
பதம்பாடி - மோகனப்பாங்
கொங்கைகள் ரெண்டு மின்ன
கோலநடை யிலன்ன
செங்கைவளை கலகலெனத் தெளிந்த
சுகம்விற்பன்ன - மோக
செண்பத மலர்மேனி
சேர்க்கையிடும் நிதானி
நன்புடன் கலைக்கியானி
நாரியர்க் கபிமானி - மோக
விந்தை விழியை மீட்டி
வேண்டும் பணிகள் பூட்டி
கந்த மலர்க்கை நீட்டி
கந்த விராலி நாட்டில்
மோகனப் பாங்கியும் வந்தாள். (12)

# வாலமோகினி வருகை

## விருத்தம்

சதுமறை வாணர் போற்றும்
ஷண்முகர் வேலர் அன்பாய்
இதவுறு மிஞ்ஞை மீதில்
அழகிய பவனி கண்டு

அதிவிதன மயில் மீது
ஆசையாய் பணிகள் பூண்டு
மதிநுதல் திலகம் மின்ன
வால மோகினி வந்தாளே. (13)

## வாலமோகினி வருணனை

### மோகினித்தரு

வாலமோகினி மாது வந்தாள் - சிங்காரமாக
வாலமோகினி மாது வந்தாள்
ஞாலம்புகழ் விராலி நாதர்மீதில் காதல்கொண்டு - வால
கதிரொளி யெனநவமணி தகதகெனப் பதசரம்
நிறைமணி கொலுசொலி குமுற - வாலமோகினி
சரசமும் இருகுண ரதிவடிவென விழ
கரமதில் அளிவளை கலகலகென - வாலமோகினி
அனநடை யிலுமிகு சுகநடை யெனவே
கனவட மிலகிய தனகிரி அசைய
வாலமோகினி மாது வந்தாளே. (14)

## தலைவனைக் கண்டு மையல் கொள்ளல்

### விருத்தம்

அந்தணர்சூழ் விராலி மலை
அறுமுகர் மார்பி லுற்ற
விந்தைசேர் கடப்ப மாலை
மீதினில் ஆசை பூண்டு

சுந்தர மிகுந்த கொங்கை
துலங்குமோ கினியாள் வானில்
சந்திரன் வரவே கண்டு
தான்மிக வருந்து வாளே. (15)

## வசனம்

வந்த மோகினிப்பெண் மயலால் நொந்து அந்தியிலெழுந்த சந்திரனைக் கண்டுதன் சிந்தையில் துயரங்களைத்தான் சொல்லுகிற விதம் பராக்கு.

## வாலமோகினி புலம்பல்

### நிலவுத்தரு

(எதுக்குல காம்போதி)

பாற்கடலில் பெண்ணுடனே தீர்க்கமுடன் பிறந்திருந்தும்
பாவையரைக் காய்வதுண்டோ நிலவே - நாளும்
ஏற்கைத்தரும் வேல்முருகர் சேர்க்கையுடன் வந்தாலும் - உன்
மார்க்கமுந் தானெங்கே போமோ நிலவே
மேருவல மாகவரும் போதுதனஞ் செயனால் -உன்
மேனியனல் ரூபமாச்சோ நிலவே - அல்லால்
சீருலவும் அரனுதலில் மேவும்விழி மேலிருந்த
தீர்க்கமதால் காயுறாயோ நிலவே - மாதருட
பொருட்டா லுன்னாக மெல்லாந் தேய்ந்திருந்து
மருகவிங்கே வரலாமோ நிலவே - நிதம்
ஆதரவாய் வேல்முருகர் மாலைதந்து சேர்ந்தாலுன்
ஆண்மை யெல்லாம் வீண்போமோ நிலவே. (16)

## கலிப்பா

வாசமிகும் விராலிகிரி வடிவேல் முருகரைக் கண்டு
ஆசைமிகத் தான்கொண் டதிக மயலால் வருந்தி
நேசமுடன் திங்கள்தனை நிந்தித்து பின்னு மவள்
ஓசையுறு தென்றலைக் கண்டுற்ற துயர்சொல் வாளே.
(17)

## வசனம்

சோமனை எதிர்த்த காமினியாகிய மோகினிப்பெண் மலைத்தென்ற லெழுந்து வந்தது கண்டு மனதினில் துயரந்தான் வழுத்துகிற விதம் பராக்கு.

## தென்றல்தரு

தமிழ்முனி மலைவாழும் தென்றலே
எந்தன் தமிழீறச்சீரு தென்றலே
அமலார் பரணங்காண் தென்றலே - கிட்ட
அடுக்காமல் அகலநில் தென்றலே
சித்தச னெறிவதே தென்றலே - என்னைச்
சீறி வருத்தாதே தென்றலே
புத்தியோ உனக்கிது தென்றலே - சும்மாபோ
உந்தனிடந் தேடித் தென்றலே - தமிழ்ஏவ
வர்மம்என்மேல் வேண்டாந் தென்றலே - உனக்கு
தருமமல்லச் சொன்னேன் தென்றலே
செம்மையுடன் வேலர் தென்றலே வந்தால்
செய்வதென்ன உன்னால் தென்றலே
தமிழ்முனி மலை வாழுந் தென்றலே.
(18)

## விருத்தம்

மின்னணி விராலி வேலர்
  மீதினி லாசைபூண்டு
பொன்னணி தனங்கள் விம்மிப்
  போதவே விரகமீறி
கன்னல்மென் மொழியாள் திங்கள்
  காலையும் நீத்துப்பின்னும்
வன்னமாங் குயிலைக் கண்டு
  மனமிக வருந்துவாளே. (19)

## வசனம்

இந்துந் தென்றலையு நிந்தித்(து) உனதுதன் தாயகமறியாத குயிலைக் கண்டுதான் சொல்லுகிற விதம் பராக்கு.

## குயில்தரு

(மத்திமாவதி)

மன்மதன் வரக் கூவுங் குயிலே - விராலிமலை
வேலவர்க்குக் கூவாய் குயிலே
நன்மையோ உனக்கிது குயிலே - சும்மா
நாவோயும் பேசாதே குயிலே

மன்மதன் தன்னை யறியாத குயிலே - சற்றுஞ்
சலியாமல் கூவுறாய் குயிலே
சொன்னேன் உண்மைகேள் குயிலே - மெத்த
சுருக்காக கூவாதே குயிலே

மன்மதன் தாயக மறியாத குயிலே - என்மேல்
சரமாகக் கூவாதே குயிலே
மாயன் மருகேசன் குயிலே - வேலர்வந்தா
நீயென் செய்வாய் குயிலே
மன்மதன் வரக் கூவுங் குயிலே. (20)

## கலிப்பா

அஷ்டதிக்கும் புகழ் விராலி -
அறுமுகர் மேலாசை கொண்டு
வட்டமுலை மீதின் மயல்
வளர்வால மோகினி யாள்
இஷ்டமுறு உமிந்து தென்றல்
இசைந்த குயில் நீத்து
துஷ்ட மதன் பேரிகையை
தூஷ ணித்துச் சொல்வாளே. (21)

## வசனம்

மதியையுந் தென்றலையுங் குயிலையுஞ் சினந்து அதிவிரக மீறிய மோகினிப்பெண் மதனுட முரசாகிய அலைகடலைக் கண்டு சொல்லுகிற விதம் பராக்கு.

## கடல்தரு

(ஆனந்தபைரவி)

சங்குமுத்த முன்பாலுண்டு சங்குமுத்த மென்பாலுண்டு
வாரணமே -
வங்கஞ்சேர்வ துன்பாலுண்டு வங்கஞ்சேர்வ தென்பாலுண்டு
வாரணமே

சிகரமின்ன லுன்பாலத்தன் சிகரமின்ன லென்பாலுண்டு
வாரணமே -
மகரமீறுவ துன்பால்விழி மகரமீறுவ தென்பாலுண்டு
வாரணமே

ஓசையார்வ துன்பாலுண்டு ஓசையார்வ தென்பாலுண்டு
வாசமல ருன்பாலுண்டு வாசமல ரென்பாலுண்டு
வாரணமே -
பொங்குநதி உன்பால்மோகம் பொங்குமதி யென்பாலுண்டு
செங்கைவடிவேல் முருகர் தினமும் வந்தாலென்ன செய்வாய்
வாரணமே.

(22)

## விருத்தம்

தேங்குயர் விராலி வெற்பில்
செழித்த சண்முக வர்மீதில்
பாங்குட னாசை கொண்ட
பதுமினி விரக மீதி
ஓங்கிய இந்து தென்றல்
பொலிகுயில் கடலும் நீத்து
பூங்கண்ண மதனைக் கண்டு
புலம்பியே வழுந்து வாளே. (23)

## வசனம்

பொங்கிய மயலால் கொங்கை ரெண்டு மீறியும் மங்கை மோகினியாள் அங்கசனாகி மன்மதனைப் பார்த்துச் சொல்லுகிற விதம் பராக்கு.

## மன்மதன் தரு

(மோகனம்)

மோகநான் கொண்டதால் கோபமுனக் கென்ன
மன்மதா
வெகுமூர்க்க முடன்அணைய நோக்கிவிடு கிறாய்
மன்மதா - மோக
ஆகமரூபி யாய்ப்போயும் உனக்கென்ன மன்மதா - இந்த
ஆன்மிக்கையேன் சும்மானுக் கலைகிறாய் மன்மதா - மோக
வாவியில்மேவிய பூவெடுத்தே வரும் மன்மதா - என்மேல்
வாதாடியே மெத்தப் போராட்டஞ் செய்யாதே மன்மதா
பூவையர்சூழ யிருந்து வளர்கின்ற மன்மதா - என்மேல்
பூவாளியெய்வதும் நீதியோ தானிது மன்மதா - மோக
இக்குவளைத் தென்னை வேகமே செய்யாதடா மன்மதா
உனக்கென் மீதிலே கனவர்மம்தான் ஏதடா மன்மதா - மிக்க
புகழ்வடி வேலர் வருவார் காண் மன்மதா - சும்மா
மேலுக்காக உந்தன் கொலுக்கூடஞ் சேரடா மன்மதா
மோகநான் கொண்டதால் கோபம் உனக்கென்ன மன்மதா.

(24)

## வசனம்

ஓதிமப் பிள்ளையும் பேசும் அஞ்சுகத்தையுஞ்
சாதிமாங் குயிலையும் போதவே மிகுந்த வண்டினத்தையுங்
கண்டு சொல்லுகிற விதம் பராக்கு.

## தரு

அன்னமே நான் சொன்னபடி கேளும் வாருமந்த
தமயந்தியுடன் சென்றுரைத்த அன்பாய்ப் பாரும்
பொன்னணியும் விராலிமேல் முருகரை நீருங்கண்டு
போற்றிசை தென்காதல் சொல்லிக் கூட்டிவாரும்

அஞ்சுகமே பூவையே நானாருங் காணேன் எந்தன்
ஆசைகேளும் உங்கள் ஆதரவு வேணும்
கொஞ்சுமயில் முருகரைக் கண்டுதானும் நான்
கொண்டமோக மெல்லாம் விண்டுகூற வேணும்

வண்டுகளென் மையல் சொல்ல இங்கே வாரும்
விண்டமலரில் மதுவுண்டு உங்கள் மனது மீறும்
அண்டர்தொழும் விராலிகிரி மீதில் வாழும் போற்றும்
அறுமுகவர் மார்பில் மாலை வாங்கித் தாரும்.

(25)

## வசனம்

அந்தியிலெழுந்த சந்திரன் தன்னையும் மண்தாத்துற்று
வந்ததென்றலை யுகந்திடு குயிலும் ஒலிகடல் தனையும்
வந்துமுன் னெதிர்த்த மன்மதன் தனையுஞ்
சினந்து முன்வந்த சிறந்த மோகினியாள்
நன்புறு சகியை இன்பமாய்க் கண்டு தன்துயருரைத்து
அன்புடன் வருந்துகிற விதம் பராக்கு.

## விருத்தம்

வேதமேவிய விராலி வேலவர் மீதிலே நான்
போதவே கொண்ட மோகம் பொறுக்கவுங் கூடுதில்லை
சாதகமிகும் பிராணசகி யெனுமாதே கேளாய்
ஆதரவாக மோகம் ஆற்றவுங் கூறுவாயேன். (26)

## வசனம்

மையல்கொண்டு மயங்கி நான் இப்படி வருத்தப்படுகிறது
சற்று மனதிரக்கமில்லையோ சொல்லடி சகியே.

## மறுவசனம்

ஆசைமீறிய மாதரை பிரகாசமானகலை மதியும்
வாசமருகிய கந்தமந்த மாருதமுந் தேமாங்குயிலும்
பூமனங்களையும் வருத்துவது சகசந்தானல்லவோ பெண்ணே.

## வாலமோகினி தன்துயரம் கூறல்

### தரு

(ஆனந்த பைரவி)

மையல்கொண் டேனென்ன செய்வேன் மானே - நிதம்
வையம்புகழ் விராலிகிரி வடிவேலர் மீதில் - மையல்
திங்கள் அன்பாக என்மேல் காய - மலைத்
தென்றல் புலிபோ லெழுந்து சீறிவந்து பாய
பொங்க மதன்கணை முனைகள் தேய - நிதம்
பொருதகுயில்கூவ மோகம்பொங்கிக் கலைதோய - மையல்
செண்டுமுலை ரெண்டும் விம்மி நெருக்க - மலர்ச்
செங்கைவளை சோர்ந்து மெத்தத் தியக்க முந்தான்
பெருகிக்கொண்ட விரக மனத்தை யுருக்க - அலை
குமுறுந்தொனி என்னுடல் குலைந்து விறுவிறுக்க
மையல்கொண் டேனென்ன செய்வேன் மானே.

(27)

### விருத்தம்

சிந்தையில் துயரம் வேண்டாம்
தேன்மொழி மானே கேளாய்
மந்தரம் நிகர் விராலி
மலைக்குற வஞ்சி வந்தால்

புந்தியில் நினைத்த தெல்லாம்
பொருந்தவே சொல்ல வல்லாள்
கந்தர்தன் நாட்டில் சென்று
கண்டுநான் வரச்சொல் வேனே. (28)

## வசனம்

வாராய் வாலமோகினியே நினைத்த காரியம் உச்சிதமாகச் சொல்லவல்லவளாய் விராலிமாமலைக் குறத்தி வந்திருக்கிறாள் அவளை அழைத்து வருகிறேன் அவளைக்கண்டு குறி சொல்லச்சொல்லிக் கேளும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே அழைத்து வாராய் பிராண சகியே

## குறத்தி வருகை

### அகவல்

குணமிடும் நாரி குலாவும் விஸ்தாரி
இணமுலை மீறி இலங்கு மொய்யாரி
சித்தசன் மோகந் தெறிந்த சொல்பாக
மெத்தவை போக மிகுநாக ரீகம்
நடையி னிலன்னம் நளினவிற் பன்னம்
இடைதனில் மின்னல் இசையு மேல்
வறனம் தனபிமானி வளர்கலைக் கியானி
இதவில் நிதானி இலகுபொன் மேனி
மன்னர் கறமேட்டி வளர்சுகங் காட்டி
மின்னுகை நீட்டி விழிவலை மீட்டி

மாங்குயில் பேடும் மாதர் திக்கீடு
பூங்கிளி மொழியும் பொருகணை விழியும்
மெய்வகை நெழிப்பும் விரிமலர் துழிப்புங்
கைவளை துலுக்குங் கந்தாப் பலுக்குங்
கொஞ்சிய நகைப்புங் குளுந்தமெய்ச் சிகப்பும்
மிஞ்சிய மெலுக்கும் மின்முலைத் துலுக்கும்
பரிமளப் பூச்சும் பனிமொழிப் பேச்சும்
இருவிழி வீச்சும் மிசைநெடு மூச்சும்
புனைதுகில் அழகும் பொருந்து மேகலையும்
கனதன மீதில் கச்சையுந் துலங்க
மார்பினில் பதக்க மணிபடஞ் சிறக்க
சீர்பெறு பவழமுஞ் சிறந்த முத்தாரமும்
மோகன மாலையும் முழுமதிக் கோர்வையும்
செகர முடனே சிறந்த பூஷணமும்
மின்னிய வளையும் விரலில் மோதிரமும்
பொன்னணிக் கடையும் பூட்டிய வகையும்
சிலம்புடன் கொலுசு சிறக்கவும் இலங்க
நலம்பெறு சதங்கை நாதமும் துலங்க
பாதசரமும் பருவிரல் மொட்டியும்
காதினில் ஓலையும் கதித்திடு சுட்டியும்
மூக்குத்தி முத்து முகத்தினில் இலங்க
பார்க்கவும் இன்பம் பரிவுடன் தோன்ற

கொண்டையில் முத்துக் குச்சுகள் அசைய
கெண்டைசேர் விழியில் கீறிய மையும்
வக்கா மணியும் வளைமணிச் சரமும்
மிக்கபொன் னாரம் விதவித மாகக்
குங்குமக் காப்பும் குளுந்த வீறாப்பும்
மஞ்சள் பிரகாசமும் மருமலர் வாசமும்
மஞ்சத்திடை தனிலே செருகும் பெட்டியும்
நெத்தியில் திலகம் நிகநிகென் றிலங்க

வச்சிரஞ் சிறந்த மாத்திரைக் கோலும்
உச்சிதமாக உரைத்திடுங் குறியும்
கண்டவர் தங்கள் கருத்துகள் மயங்கி
விண்டலந் தங்கு மென்கை தானோ
நாககன் னிகையோ நலமிகு ரதியோ
தோகையர்க் கரசோ துலங்குபொன் மகளோ
என்னவு மன்ன ரிதவுகள் பேச
மின்னணி விராலி வெற்பினி லிருந்து
காலினில் சிலம்பு கலின்கலி னென்ன
வாலிப மின்குற வஞ்சி வந்தனளே.

(29)

## தரு

மமோபதி

சரணம் பகவதி கவுரி புதல்வனே சரணம்
கேசமுக வினாயகா சரணம்
மதியணி அமலரானந்த சரணம்
உமை மணவாளனே சரணம் சரணம்

சரணம் திருவுரை கமலமார்பனே சரணம்
ராமா அவதாரவா சரணம்
கருமுகில்மேனி மாதவா சரணம்
வெங்கிட மாயவா சரணம் சரணம்

சரணம் சரவண முருககுருபர சரணம்
வளர்மயில் வாகனா சரணம்
கலைமகள் மருவு புயம்நிறை சரணம்
தெய்வானை நாயகா சரணம் சரணம். (30)

## திரைத்தரு

வஞ்சி வந்தாள் - குற
வஞ்சி வந்தாள்

அழகு திருவிலும் உருவம் இவளென
அரசர் மயல்மிக மீறவே
இளமை மதிநுத லிலக அனநடை
இசைய இதளமு தூறவே
குறவஞ்சி வந்தாள்

தங்கச் சரப்பணி தும்பிப் பதக்கமும்
கொங்கைக் கிரியுந் துலங்கவே
செங்கைச் சிலைதவழ் கலங்கச் சதங்கைச்
சிலம்புத் தொனியும் இலங்கவே
குறவஞ்சி வந்தாள்

வட்ட மதிநுதல் சுட்டி தனிலும்
வச்சிரம் நிகநிக நிகெனவே
சட்ட முடன்குறப் பொட்டியும் மாற்றினன்
தாழ வடந்த கனதெனவே
குறவஞ்சி வந்தாள்

காலில் கொலுசுடன் சதங்கைப் பாடகங்
கனக தண்டை அசையவே
நீலமயில் முருகேச ரெனும்வடி
வேலர் வளர்ந்திரு நாட்டினிற்
குறவஞ்சி வந்தாள். (31)

## வேறுதரு

வஞ்சி வந்தாள் ........................பாற்குற
வஞ்சி வந்தா ளய்யா

வஞ்சி மருமலர் சூடி
வளர் மோகனராகம் பாடி
வஞ்ச மதன் கண்ணாடி
வாலமோகினியைத் தேடி (வஞ்சி)

பச்சைப் பரிமளம் பூசிப்
பவழவிரல் கையை வீசி
மெச்சு மஞ்சுகம் போலப்பேசி
மின்னார் குணமைசொல் மகராசி (வஞ்சி)

சிந்தூரத் திலகம் தீட்டிச்
செண்டுமுலை ரெண்டும் காட்டிச்
சுந்தரப் பணிகள் பூட்டித்
துரை வேலர்திரு நாட்டில்
வஞ்சி வந்தா ளய்யா. (32)

## வேறுதரு

வந்தனளே குறவஞ்சி - சிங்காரமாக
வந்தனளே குறவஞ்சி

குங்கும கொங்கை குடங்கள் குலுங்கவே
மங்கை மருங்கிடை வஞ்சி யைப்போல் வந்தனளே

கந்த மிகுந்த கதம்பம் அணிந்திடு
அந்த மிகுந்த மையந்தி யைப்போல் - வந்தனளே

விந்தை யுடன்திகழ் குஞ்சரி பங்கிலு
கந்து மணம்புணர் கந்தர்தன் னாட்டில் வந்தனளே.
(33)

# வேறுதரு

வந்தாளய்யா குறவஞ்சி மிகுந்த
சுந்தரமேவிய துரைவேலர் நாட்டில்
வந்தாளய்யா குறவஞ்சி

தங்கவடங் களிலங்க முத்துத்
தாவட மேகலை தானுந் துலங்கச்
செங்கை வளையலுங் கயிணை
சேர்ந்திடு கொங்கை சிறந்து குலுங்க - வந்தாள்

சந்தனஞ் சவ்வாது பூசிமிக்க
சரசஇங் கிதமான தயவாகப் பேசி
விந்தை விழிவலை வீசிநல்ல
விதமான குறிசொல்ல மிகுந்த பிறையாசி - வந்தாள்

வாசமலர்க் கையை நீட்டி ரேகையை
மாத்திரக் கோலினால் வரிசையாய்க் காட்டி
ஆசைமன் மதவேலிகண் ணாட்டி விராலி
அறுமுக வேலரன்புசேர் நாட்டில் - வந்தாளய்யா குறவஞ்சி
(34)

# வசனம்

மோகங்கொண்ட நாகரீக மோகினியிடத்தில்
யோகஞ்சேருங் குறிசொல்ல வந்த குறவஞ்சி மாது
தராதலம் துதிக்கும் விராலியங்கிரி
வாசனுடைய வாசலின் வளமையை
நேசமாய் சொல்லுகிற விதம் பராக்கு. (35)

## வாசல்தரு

திருமகளுங் கலைமகளும் அம்மே
　　செனித்திருக்கும் வாசலிது அம்மே
மருவுறையும் விராலிநக ராளும்
　　வடிவேலர் வாசலிது அம்மே.

இந்திரரும் வானவரும் அம்மே
　　இறையவரும் பறையவருஞ்
சந்திரரும் சூரியரும் அம்மே
　　தளைத்தோங்கும் வாசலிது

சத்தரிஷி யீஷபர்கள் அம்மே
　　தலம் பெருகும் வாசலிது
சித்திநவ சித்தர்களும் அம்மே
　　தெண்டனிடும் வாசலிது

பெரியதவ மாமுனிவோர் வந்து
　　பேறுபெற்ற வாசலிது அம்மே
அரியசத்து மறைவாணர் அம்மே
　　அன்பு செய்யும் வாசலிது

பைந்தமிழ்சேர் வாணருக்கும் அம்மே
　　பட்சமுள்ள பத்தருக்குஞ்
சந்தரன் சவுபாக்கிய அம்மே
　　தந்தருளும் வாசலிது

பச்சைமயில் சிறைவிரித்து நின்று
　　பணிந்து நிற்கும் வாசலிது அம்மே
உச்சிதமாஞ் சேவல்கொடி அம்மே
　　ஒளிவிளங்கும் வாசலிது

தேவகன்னிய திருநடனம் அம்மே
சிறந்திலங்கும் வாசலிது
கோயில்பரி சனங்களெல்லாம் வந்து
கூட்டமிடும் வாசலிது அம்மே

மருக்குலவுந் திருவுறையுஞ் செங்கண்
மால்மருகன் வாசலிது
திருக்கிடப்ப மாலைபுனை அம்மே
செயவேலன் வாசலிது. (35)

## வசனம்

அதோ வாராய் வாலமோகினியே நீ
அழைத்து வரச்சொன்ன படிக்கி
விராலியாமலைக் குறத்திதனை அழைத்து வந்தேன்
உன் மனத்திலுதித்த காரியம் கேளும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே கேட்கிறேன் பிராணசகியே.

## விருத்தம்

சுந்தரமிகும் விராலித் துரைவடி வேலர் நாட்டில்
அந்தமாங் குறத்தியே யுன்னாண்மை யுருவடி வம்போல்
இந்திரலோகத் திலில்லை யென்னுட தவத்தால் கண்டேன்
வந்துதானுங்கள் சாதிவள மெல்லாம் வழுத்து வாயே.

(36)

## வசனம்

அதோ வாராய் குறவஞ்சி மாதே உன்னைக்
கண்டபோதே மனதினில் நினைத்த காரியமெல்லாங்
கைகூடுமென்று மகாசந்தோஷ மாச்சுது
ஆனாளுங்களுட சாதியும் சாதிவளப்பமும்
இன்னதென்று சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீயேம்மே.

## தரு

அம்மம்மே ஏ பெரியம்மே
எங்கள்சாதி சொல்ல வேணும்
என்றல்லோ கேட்கிறாய்
எங்கள்சாதி சொல்ல வேணுமா
சாரியர் நாட்டுக் குறத்தி யென்றுங்
கொச்சைக் குறத்தி யென்றுந்
தெய்வக் குறத்தி யென்றும்
நாலு சாதியுண்டு அதிலே
நாங்கள் தெய்வக் குறத்தி
தெய்வக் குறத்தி யரிம்மே. (37)

## தரு

மாதே எங்கள் சாதியைச் சொல்லக் கேளும்
மரியாதியான மகாசாதி
நீதிவடி வேலவர் மேலாசை
நேசமதாய்க் கொண்ட மோகினியே

வெள்ளிமலை யீசர்தன் சாதியை
விளங்கின பேர்தந்த ஈஸ்வரனார்
உள்ளபடி யுங்களுட சாதி
உச்சித மென்று மழுவெடுத்தார்
மாயன்தனைக் கண்டவன் சாதி
வளங்களை யெல்லாம் விளங்கினதில்
நேயமுட னுங்களுட சாதி
நேர்த்தி யென்றேன் களய
நெய்யி லிட்டார் கன்னல் சிலைவேழம்
தன்சாதியைக் கண்டறி வோமென்று போனோன்
தன்நெஞ்சு தன்னிலமுக்க முண்டாயித் தான்
கண்ணில் காணாக் கூலங் கொண்டான்
மானே வடிவேலவர்க்கு நாங்களும்
மாதைக் கொடுத்த வகைகேளும்
காரணந் தனிலே வலிய வந்து
கைக்கொண் டாரெங்கள் கலைக் கன்னியை
செண்டுமுலை மாதரசே நாங்கள்
செல்வம் சிறந்த தெய்வச்சாதி
அண்டர் தொழும் வேலவர்நன் னாட்டில்
ஆதரவாய் வாழுமோ கினியே. (38)

## வேறுதரு

எங்கள் சாதிவளமை கேள்அம்மே விராலிவேலர்
இலங்கும் நாட்டினில் துலங்கு மோகினியே
பசுங்களபக் கொங்கை நிறையக் கெந்தரிப்போம்
அக்குமணிக் கோர்வைகள் அதிசீராய்த் தரிப்போம்
நறுங்குறிஞ்சி மலரை முடித்துச் சிங்கி அடிப்போம்
பெண்களுடன் வாதுபேசி கீதம் படிப்போம்

அனுதினமும் நலமுடன் குறம்பாடி யாடுவோம்
வைய்து சிங்கனை நயந்து பின்பு கலந்து கூடுவோர்
சிந்தை மகிழ்ந்து குழந்தையைப் பெற்றுநாங்க ளெடுப்போம்
உகந்த காயங்கூட்டிக் குறவன் குடிக்கக் கொடுப்போம்
கேட்டபேர்க்கு வளம்பெற குறியுரைத்து வெல்லுவோம்
கையில்ரேகை மாத்திரைக் கோலால் நீட்டிச்சொல்லுவோம்
தேக்கிலைதனில் தேனுந்தினைமாத் தான்அருந்துவோம்
கணவனிருக்க சிறியகொழுநன் சேரபொருந்துவோம்
தினைப்புனத்தில் மான்மயிலும் வந்தால் ஓட்டுவோம்
ஆனைசிங்கம் வந்தால் சரத்தைத் தொடுத்து வாட்டுவோம்
கறிசமைக்கப் பூனைகுத்த மனது பொருந்தோம்
ஆனைகுத்திப் பொறிக்கறி யளில்லா மலருந்தோம்
இலங்கிவளர் காணமயில் வேலன் பதத்தை
பரவிநித்தங் கருத்தி லிருத்தி மிகவுந் துதிப்போம்
மணங்கள் செய்தால் அவர்க்கெலாம் கெந்தம் பூசுவோம்
அஞ்சுபண தனவரிசை யாகப்பருசம் பேசுவோம்
இருகரமுஞ் சொந்தமாகப் பாவித்து வாங்குவோம்
பெண்ணை மணம் சூடிக்கொடுத்து துயரம் தாங்குவோம்
சீதனங்கள் வரையில் சிலது விடுக்க விள்ளுவோம்
மானுதவும் வள்ளியம்மனை வாழ்த்திக் கொள்ளுவோம்
மாமனுடன் பரியாசத்துடன் பண்டு கூறுவோம்
மாமிசொன்ன படிக்கு நடந்து வார்த்தை மீறுவோம்
அம்மே இன்னுமெங்கள் சாதி வலிமைதான்
சொல்லவென்னா லிசைந்து சொல்லுமெட்டு கிழமைதான்
விராலிநகர் மன்னர் முருகர் நாட்டில் யோகமாய்
மீறிவளர் வாகினியே நிகராகு மோகினியே அம்மே
அம்மே எங்கள் சாதிவளமை கேளம்மே.

## விருத்தம்

கங்கையருள் பூதல......னெனும் விராலிகிரி
மேவுதிருக் கடம்பா நாட்டில்
இங்கிதமாங் குறமாதே உங்களுட
சாதியெனக் கின்ப மாக
வங்கணமாய்ச் சொல்லி னேன்சாதி
வளப்பமு முரைத்த வண்மைபோலச்
சங்கதியாய் நீயறிந்த மலைகளெல்லாம்
நானறியச் சாற்று வாயே. (40)

## வசனம்

அதோ வாராய் பெண்ணே! குறமகளே! உங்களுட சாதியு சாதிவளப்பமுங் கேட்டு மகாசந்தோஷமாச்சுது இனிநீ சஞ்சரித்து வந்த மலைகளெல்லாம் நானறியச் சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரி யம்மே.

## தரு

தேசமெங்கும் நானறிந்து வந்த
திருமலையெல்லாம் சொல்லக் கேளம்மே
ஈசனருள் முருகன் மேவும் விராலிநாட்டில்
இலங்கி வளருவால மோகினியே

மருவுறை யுருதங்க மகமேரு
மகேஸ்வரன் வளர்வெள்ளி மாமலை
தருவுயரஷ்ட குலபர்வதம் மந்திரகிரி
தழைக்கு மிமையகிரி தானறிவே னம்மே

வையமகிழ் பவளமலை நீலமலை
பச்சை மாமலை முதலாக
வெய்யோ னுதயகிரி விளங்கிய அஸ்தகிரி
விந்தை கிரியும் வடவேங்கிட அம்மே

அருணகிரி விருத்தா சலம்வெகு
அன்பு சேர்ந்திடு கொல்லி மாமலை
திருவோங்கிமலை ரெத்தினகிரி சிராமலையுடன்
சீருயர் சாமிமலை நானறிவே னம்மே

நாரதன் மாமுனிமலை பிரான்மலை
நற்கந்த மலைகழுக் குன்றமுஞ்
சீர்பெறு பரங்குன்றம் பொதியமா மலையுடன்
செழித்து வளர்சதுர கிரியறிவே னம்மே

ஆனைமலை வராகமலை புவியில்
அன்பர்க் கருளுதவும் பழனிமலை
வானுயர்ந்திடு சோலைமலை வேள்மலை கருமலை
வீரமலை தோகைமலை அறிவே னம்மே

இன்னம்வெகு கோடிமலை நாங்கள்
இருந்தது சொல்ல முடியாதம்மே! அம்மே!
மின்னனி வடிவேலர் விளங்கும் விராலிகிரி
மீதில்குடியா யிருந்தோ மம்மே......... அம்மே.

## விருத்தம்

அருமறை முனிவோர் போற்றும்
அறுமுக வேலர் நாட்டில்
திருமக ளென்ன வந்த
தேன்மொ ழிக்குறப் பெண்ணேநீ
உருமை யாய்மலைக ளெல்லாம்
உரைத்தது போல உங்கள்
மருவுயர் விராலி வெற்பின்
மகிமையை வழுத்து வாயே. (42)

## வசனம்

அதோ வராய் பெண்ணே! குறமகளே! நீயறிந்து வந்த மலைகளெல்லாஞ் சொல்லக்கேட்டு மகாசந்தோஷமாச்சுது ஆனாலுங்கள் விராலிமலை யிலுள்ள அதிசயமும் வளப்பமும் சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

## தரு

வாசமேவும் விராலி மாமலை வளமை சொல்லக் கேளாய்
மறைவாணரும்தமிழ்வாணரும் மகிழ்ந்தே கலைபுகல்வார்
நேசமாய் வளர்முனி வோர்களும் ரிஷிஸ்பரர் முதலாய்
நித்தமும் வெகுபத்தி யாகவே நின் று தவம் புரிவார்
விண்ணார சிங்கம் வரவேகண்டு வேள்மனந் திகைக்கும்
மேடமவர் கண்டேபுலி மிகவும் சினந்த தட்டும்

தண்ணார் மதிமானைப் புலிதாவி மிகபாயும்
தனியே தவிகடகம் வரத்தானே கண்டு மிரளும்
மலர்மேல் வண்டு மோதுமது வளிந்தே மிகவோடும்
வருபானுவின் புரவியின் கால்வழுக்கி ரதஞ்சறுக்கும்
நலமார் சங்கந் தவமுந் தத்தி நாடிகயல் பாயும்
நயமாகிய சிப்பி முத்து நழுவி மிதந்தோடும்
கவிகள் கழுகேறி நின்று கதித்தேய்ந் தசைந்தாடும்
கன்னல்மிகச் செழிமதி தெல்லும் மயங்கும்
இளங்கமு கோடினை பெருக்கும் சிவையாம் கதிரொன்றனைச்
சிவந்தகனி யென்றேசில மந்திகள் தாவிமதித் தியங்கும்
மனமயங்கும் பசுவுங் கொடும்புலியுஞ் சேர்ந்து பரிவாய்ச்
சுனைநீரைப் பருகி கரையேறி வந்து படுக்கும்
ஒருதலத்தில் இசைவாய் நாகங்கீரியுடனிணங்கி விளையாடும்
எலிபூனை யருடனே சேர்ந்திருந்தே மனம் பொருந்தும்
வெகுமகிமை பூண்டு இன்பமுடன் கேளாய் இன்னம்

எருமை விருட்சத்தின் பாலுண்பே ரிருப்பார் வெகுகாலம்
மின்னுஞ் சோதிபுல் லுண்டதை விரும்பிமிகப் பொசித்தால்
மேனிதங்க மயமாய்ப் புவிமீதிலிருப் பார்கள்
நலஞ்சேர்க் கருநெல்லிக் கனியுண்டு அதைஉண்டோர்
நன்றபாதி எவ்வர்ணமாக வென்னாளும் மகிழ்ந்திருப்பார்
இலைகாய் மரமெல்லாம் இனித்திருக்கும் ஒருவேம்பு
இன்பமுடன் தின்றால் காய இருகிச் சித்தி பெறுவார்
பச்சிலை தனிலொன் றுண்டதனைப் பறித்து திலதமிட்டால்
பதினாலுல கெல்லாஞ் சுத்திப்பாத்து மிகவரலாம்
மிச்சமாய் மின்னுமொரு பச்சிலை மெத்தவுந் தானுண்டு
வெள்ளீய இரும்புஞ் செம்புமிகவுந் தங்கஞ் செய்யலாம்
அ.........பின்னுமொரு பச்சிலை அரைத்துத் திலதமிட்டால்
அடங்காதவர் சேர்வார் அழகில் மதனாவார்

இன்பமுடன் ஒருமூலிகை இருக்குமதைத் தரித்தால்
எண்ணமான ரூபமெடுத் தியல்பாய்ச் சென்றுவரலாம்
எங்கள் மலைதனிலே சஞ்சீவி முதலாக
இன்னம் வெகுகோடி வளமிருக்கு தடியம்மே
துங்கமயில் மீதில்வரும் சுப்பிரமணியர் நாட்டில்
தேகைவடி வாகவளர் மோகினியே கேளாய். (43)

## கலித்துறை

சூர்தனை வென்றவடி வேல்முருகர் துலங்கும் வெற்பில்
வார்முலை மின்னுகிற மயிலே சொந்தமாக உங்கள்
தார்பூனை வெற்பின் வளமையெல்லாஞ் சொன்னகாரி யம்போலச்
சீருடன் நீகண்ட தேசமெல்லாம் இப்பச் செப்புவாயே.
(44)

## வசனம்

அகோ வாரும் பெண்ணே! குறமகளே! உங்கள்
மலைவள மெல்லாம் கேட்டு மகாசந்தோஷமாச்சுது இனி
நீயறிந்து வந்ததேசங்களையெல்லாம் சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே

## தரு

அவனிதனில் கண்டிரந்த தேசமெல்லாம்
அன்னமே நான் சொல்லக் கேளாய்

வளர்புவன மகிழ்வட காசிகல்யாணம்
பொருந்துங் கொல்லர் புதர் முதலாய்
(அவனிதனில்)

வங்காள மீராறு மலையாள மேழும்
மாகதங் கச்சி கபாடம்வளர் கொங்கங்குடகந்
துருவமுச் சீனங்கு கூதங்கு லிங்கம்
விலாடம் நல்ல சிங்கள மீழுவஞ் சாழுவம்
..........தேசந்தெலுங்கு மாறாடமிகு கங்கந்
துழுவங் கவுசிலை கேகயம் கண்டி
தேசந்திரிகூடம் உயர்கலிங்க மிங்கிதஞ்
சேர்விராடங் கொச்சி காராடதேசங் கர்நாடம்
(அவனிதனில்)

இந்துஸ்தானந் துலுக்காணங் கிறுவாண மிசைவான
கேரளதேசம் வளர்சிந்து கபாடந் திராவட
மோட்டியஞ் செழித்திடும் டில்லி விலாசம்
வெகுவிந்தை கள்சேர் கொல்லஞ் சேர்க்க
ஐந்தாரையும் வெல்வதுதான் பிரவாசமிகுந் தானதுதான்
அவனிதனி லெங்கும் சுத்தி வந்தேன் வெகுதேசம்
எங்கள் துரைவேலர் தேசந்தான் வாசமெத்த துலங்கி
வளரும் பிரகாசம் அவனிதனில்க் கண்டறிந்த
தேசமெல்லாம் அன்னமே நான்சொல்லக் கேளாய்.
(45)

## கொச்சகம்

சீரிலங்கு பச்சைமயில் செவ்வேல் விராலி வெற்பில்
பேரிலங்கு வாழுகுறப் பெண்மயிலே நீகேளாய்
பாரிலுள்ள தேசமெல்லாம் உரைத்த தைப்போலநீ
தெரிசனங்கண்ட தெய்வஸ்தலங்களெல்லாம் சொல்வாயே.
(46)

## வசனம்

அகோ வாராய் பெண்ணே குறமகளேநீ
அங்கங்கு சென்றதேசங்க ளெல்லாம் சொல்லக்கேட்டு
வெகுநேசமாய் மனது குளிர்ந்தோய் இனிநீ
தெரிசனஞ் செய்துவந்த தெய்வஸ்தலங்க ளெல்லாம்
வரிசையாய்ச் சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

## தரு

சீரங்கம் திருவானைக்காவல் சிராபள்ளி
திருவாடுதுறை கண்ணபுரம் திருவையாறு
கண்டியூர் குடந்தை மத்தியார்ச்சுனம்
சிதம்பரம் சீர்காழி முதலாய் பேரம்பலம்
திருக்குத்தாலம் வேங்கிடம் பேராகவளர்
காஞ்சீபுரம் பேரூர் திருவாரூர் வேளூர்
மறைக்காடு பெருந்துறை செங்காட்டங்குடி
மன்னார்கோயில்த் திருவெண்காடு நாவலூர்
மாயூரம் திருவிடைமருதூர் வளர்திருவாடனை
ராமேசுவரந் திருவடி உத்திரகோச மங்கை
பொன்னார் திருச்செந்தூர் தென்காசி கூடலும்
பூவனந் திருக்கோட்டியூரும் புகழ்திரு வேட்கஞ்
சோலைமலையின்பம் பொருந்திவளர் கழுக்குன்றம்
ஆவினங்குடி சிவகிரி சுப்ரமணியமும்
கச்சி கபாடங்காசி அண்ணாமலை கருவூர்
கடம்பர்கோயில் அழகு சிவாலயம் வயலூர்
காவுயர் கதிர்காமம் வைகுந்த முதலாக் கயிலாசமும்

மிகஅறிவேன் கதிக்கும் விராலிகிரி தன்னில்
மேவிய கந்தர் வளநாடும் அறிவேன்.

(47)

## விருத்தம்

பொன்மருவும் வேல்முருகர் விராலிகிரி
மீதிலன்பு பொருந்தி வாழும்
இன்புருவுங் கும்பமுலை வஞ்சியரே
ஒருவசனம் விளம்பக் கேளாய்
அன்புடனே கண்டதெய்வ ஸ்தலங்க
ளெல்லாம் உரைத்தவடி வழகுபோல
இன்பமுடன் தென்விராலி நாட்டுவள
மெல்லாம் நீயியம்பு வாயே. (48)

## வசனம்

அகோ வாரும் பெண்ணே! நெடுமகளே!
தேசமெல்லாம் நீகண்டுவந்த தெய்வஸ்தலங்களை யெல்லாஞ்
சொல்லக்கேட்டு நான் தெரிசனஞ் செய்தாற் போலாச்சு.
கதிக்கும் விராலிகிரிதனை அறிவோமென்றாயே.
அந்தநாட்டு வளங்களைச் சொல்லவேணும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

## தரு

சோலைதனில் முகிலைக் கண்டு தோகைமயி லாடும்
தொனிசேர் குயில்கூவி இன்பங் கொண்டு ராகம்பாடும்

சாலமலர் மீதினில் செம்பவள வாய்த்தத்தி கூறும்
தாவிக்கவி வளர்ந்திடக் கனிமீதில் தாழந்தீரும்
பரிவாயனஞ் சிறமிதுகூடிப் பாத்துமகிழ்ந் திருக்கும்
ப(க்)கலான் பந்தமெனவே வந்து பகரமுட னெறிக்கும்
தரிசாய்த் தென்றல் வீசுமனைத் துளிபோல் மலர்சொரியும்
துலங்குவளர் குருதஇந்துந் தொண்முகை விரியும்
கனிவீழ்ரசம் பாய்ந்தே சென்னல் கதித்தே வளந்திருக்கும்
கன்னல்மிகச் செழித்தே இலங்க முக்கோடினை பெருக்கும்
வனசமிகும் விராலிகிரி வடிவேலவர் நாட்டின்
வளமை சொல்லமுடியா தெங்கள் மாதரசே கேளாய்.

(49)

## கலித்துறை

அடியார் களும்வடி வேல்முருக ரன்பாக நித்தங்
குடியா யிருக்கும் விராலி கிரியின் குறமகளே
துடியாய் விராலிநன் னாட்டின் வளங்களைச் சொன்னதுபோல
திடமாய் அறிந்தநதிக ளெல்லாம் இப்பச் செப்புவையே.

(50)

## வசனம்

அகோ வாரும் பெண்ணே! குறமகளே!
வாசமேவிய விராலி நன்னாட்டின்
வளமையைச் சொல்லக்கேட்டு வெகுநேசமாய்
மனசு சந்தோஷமாச்சுது இனிநீ
கண்ணாரக் கண்டுவந்த நதிகளையெல்லாம்
நன்றாகச் சொல்லவேணும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

# தரு

புண்ணியநதி தீர்த்தமெல்லாம் புகலக்கேளும் பெண்ணரசே
விண்ணவர்புகழ் விராலிவேலர் பொன்னின் மான்தீபோல
- புண்ணிய

கங்கைநதி யெமுனைநதி கிருஷ்ணைவேணி சரசுவதி
துங்கபத்திரை கோதாவரி சொர்ணபத்திரை காவேரி
- புண்ணிய

சிந்து மணிமுத்தாநதி சிறந்தபெண்ணை மானதியுஞ்
சுந்தரஞ்சேர் வேதநதி துலங்கும் நர்மதா கெவுரி
- புண்ணிய

வேகவதி தாம்பிரவேணி விளங்குங் கன்னியாகுமரி
வைகை யோகந்தரும் அமராவதி உகந்த சண்முகநதி அறிவேன
புண்ணியநதி தீர்த்தமெல்லாம் புகலக்கேளும் பெண்ணரசே.

(51)

## கலிப்பா

தென்னவன்வாழ் கூடலிலே செ..........சமனாதியளைக
மின்னுங் கழுவேர் வையத்த வேல்முருகர் விரலிவெற்பில்
நன்னயஞ்சேர் குறமாதே நதிவளப்பம் சொன்னதுபோல்.....
.............யக்கற்ற வித்தை தன்னை யெல்லாஞ் சொல்வாயே.

(52)

# வசனம்

அகோ வாரும் பெண்ணே! குறமகளே! நீகண்டுவந்த
புண்ணிய நதிகளெல்லாம் சொல்லக் கேட்டு
மகாசந்தோஷ மாச்சுது இனிநீ கற்றறிந்த
வித்தையெல்லாம் சொல்ல வேணும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

## தரு

கற்றறிந்த வித்தை யெல்லாங் கேளாய்
கைகண்ட மூலிகை வகையுஞ் சொல்லுவேனே
வெற்றி வடிவேல் முருகர் விராலி நாட்டில்
சந்திரவின்ப வதனஞ் சிறந்த மின்னே இப்போது
ஆனைகளைப் பிடித்து வந்துகரகத் திலடைப்போம்.
துடியான சிங்கந்தனைக் குரங்காட்டியே வைப்போம்
பூனைதனை புலிவடிவாகச் செய்வோம்
நல்லபுலிகளையும் பூனையாகப் பொருந்தச் செய்வோம்
வேங்கையைப் பிடித்து மருங்கிருக்கச் செய்வோம்
நல்லவிதமாகவே மானையிரு விழியில்ச் சேர்ப்போம்
பாங்கான கலையைப் பிடித்திடையில்க் கட்டுவோம்
எங்கள் பராக்கிரமத்தால் கரடியாட்டம் பார்த்து மகிழ்வோம்
பட்டமான.............தட்டி.......ல் வரச்செய்வோம்
மரப்பாவையைச் சிரித்து இன்பம் பகரச் சொல்வோம்
எட்டிக்காய்தனை மாங்கனியாகச் செய்வோம்
நல்ல இரும்பையும் செம்பையும் தங்கமென்னச் செய்வோம்
தண்ணிக்குட் புகுந்து சோறு சமைத்து வருவோம்
பின்னும் தண்ணிதனில் கல்மிதக்கத் தானும் செய்வோம்
எண்ணமான அக்கினி யிலேறி நடப்போம்
புவியெங்கும் அரைக்கணத்தில் சுத்தி இங்கே வருவோம்
இந்திரமுதல் மயேந்திர ஜாலம் சோகாணமோடி
எடுக்குவித்தை காருடங்க ளெல்லாஞ் செய்வோம்
வித்தையான செப்புக்குள்ளே கூற்றைப் பிடிப்போம்
பின்னும் வேடிக்கையாய் செப்பைக்காட்டி மூடிக்கொள்ளுவோம்

பச்சைமால் தனக்குமொரு பச்சிலை தந்தோம்
ஆரும்பார்க்க மூவடியாய் இந்தப்பாரை யளந்தார்
மிச்சமான மூலிகை யோள்ரீசர்க் கியந்தோம்
மகமேருவை எடுத்து விலாங்கனுக்கே கொண்டார்
வரிசையாய் அனுமற்கொரு குளிசங் கட்டினோம்
சென்றுமனோ வேகமாய்ப் போய்சஞ்சீவி கொணர்ந்தார்
பரிவுட னிந்திரர்கொரு மந்திரஞ் சொன்னோம்
மிகப்பறந்து திரிகிரிகளையும் பரவாமஞ் செய்தார்
இணங்காத பேர்இணங்கவே ................தருவோர் மனதில்
எண்ணிய கருமங்கண்டு இன்பமாய்ச் சொல்வோம்
குணமிகு வித்தைய ளின்மைவெண் துண்டு
கொக்கோக நூல்படித்து வளர்மோகினி கேளாய். (53)

## விருத்தம்

இத்தனை வித்தையள் படித்துச் சொல்பவரை
இப்புவியி லெங்கும் காணேன்
முத்தமிழ்...........................கிரியிலனு தினமும்
வளர் முருகர் நாட்டில்
வித்தைமிகும் குறமாதே எந்தனைப்
போலாசை கொண்ட மின்னார்கெலா................
உத்தமமாய்க் குறிஉரைத்து வரிசைபெற்ற
வகையெல் லாம்முறை செய்வாயே. (54)

## வசனம்

அகோ வாரும் பெண்ணே! குறமாதே! நீ கற்றறிந்த வித்தையெல்லாம் கேட்டு மகாசந்தோஷமாச்சுது இனிநீ அவரவர்க்குக் குறிசொன்னதும் அவரவர்கள் கொடுத்த வரிசைதனைக் கிரமமாகச் சொல்லவேணும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே சொல்லுகிறேன் கேளீரம்மே.

## தரு

மதுரை மீனாட்சிக்கிச்..........................சயமதி
   சூடிவரு குறிசொன்னேன்
முத்து மாலையுங் கவைச்சிர ஓலையும்
   பொற்கம்பிச் சேலையுமே அவர் கொடுத்தார்

திருமகள் சீதைக்கு ராமன் மணஞ்செய்யும்
   திறமாகவே குறிசொன்னேன் வளர்
செங்கைக் கடையமும் முன்கை மூதாரியும்
   இங்கிதமாகவே கொடுத்தார்

ரதியெனும் மாதுக்கு மதராசன் மணஞ்செய்ய
   இதவாக வருங்குறி சொன்னேன்
நவரத்தின பதக்கமும் கொடுத்துச் சரப்பணி
   முத்து துராயமுங் கொடுத்தார்

சிந்தை மகிழ்தேவ குஞ்சரி வள்ளிக்கி
   ..............ருங்குறி சொன்னேன்
நல்லசெம்பொற் சதங்கையுந் தும்மிப்பதக்கத்
   தோடும்புலித் தாயத்துங் கொடுத்தார்.

வங்கள்.............................................குறி
   வங்கண மாகவே சொன்னேன்
நல்லவக்கர மணிகளும் மிக்க பொன்னாரமும்
   அக்கு வடங்களும் கொடுத்தார்

........................................க்கு நிச்சயமாங்
குறிஎன் உச்சிதமாகவே சொன்னேன்
பட்டுக் கச்சையும் வெள்முத்துக்குச் சுரூமாலுடன்
கைச்சரமும் மெச்சித்தபடி கொடுத்தார்

வாரும் பச்சைமயில் வடிவேலற்கு
வரிசையாகச் செயஞ் சொன்னேன்
விராலிமலை வாசமுஞ் சொல்லத்
துலையாத மோகமுங் கொடுத்தார்.

(55)

## விருத்தம்

மின்னு நவமணி முடிசேர் முருகேசர்
விராலிகிரி மீதில் வாழும்
பொன்னணியுந் தனஞ்சிறந்த வஞ்சியரே
ஒருவசனம் புகலக் கேளாய்
தன்னமையாய் அவரவர்க்குக் குறியுரைத்து
வரிசைபெற்ற தன்மை போல
மன்னிமையா கயந்தன் க.................மகிழுங்
குறிபார்த்து வழுத்து வாயே.

(56)

## மறு விருத்தம்

திருமருக என்னும் வடிவேலர் முருகேசர்
பாவிநித்தஞ் செழிக்கு நாட்டில்
வரியுலவும் விழிசிறந்த வாலமோ கினியே
நின் மலர்க்கை பார்த்துப்
புருஷமுடன் குலதெய்வம் வேண்டிக் கொண்டு
புதுமையாய் குறிமனது பொருந்தி பார்க்க
வரிசையுடன் வேணவஸ்து வகைகளெல்லாங்
கொண்டு மிகவரச் செய்வாயே. (57)

## தரு

ஓசத்திக் கஸ்தூரியாலே மெழுகடி
உகந்த சந்தனங் கொண்டுதான் மிக
உண்மை யாய்க்கோல மெழுதடி
வசதியாக மலர்ப்பந்த லையிட்டு
வாளைகமுகு மாந்தோர ணங்களும்
வரிசை யாகவே கட்டடி

குடவயிற்று வினாயகன் பூசைக்குக் குகந்த
முக்கனிதோசை யிட்டிலி கொண்டுவா
நல்லமோதகங் கடலை சர்க்கரையவல்
பயரெள்ளுண்டை கருத்துடனே வெகுவிருப்பமாய்த்
தேங்காய்கள் பாக்கிலை கொண்டுவா

சிங்காரமான சொர்ணகும்பம் வைத்து
சிறக்க நாளியில்முத் தளந்துவை
தீபதூப முன்காட்டியே
பொங்கமாய் வர்ணச்சேலை யொன்று வைத்துப்
புஷ்பவகை யளைத்தூவியே - மனம்
பொருந்தி வந்தனை செய்யடி

எந்தன் கையில் பிரம்புக்கோர்
காணிக்கை இன்பமாகவே கொண்டுவா
குறியென் னமாய்ப் பார்த்து சொல்லுகிறேன்
..........வீரவாகுதேவர் அகோர மாகவே வருகிறார்
பூசை அன்புடன் செய்து கும்பிடு

கடினமாகக் கருப்பன் வருகிறான் கூறு.......
வாழும் விருப்பமாய் வைத்து வேண்டிக்கோ
துடினமான ரணவீர பத்திரனைத்
தொழுதுபூசையிட் டொருமையாயொரு சுட்டுவை

உக்கிரமா மெய்க்கநாச் சியம்மாளுக்கு
உகந்த சாவலுங் கிடாயும் வெட்டியே
உண்மையாய்ப் பூசைபோட மிக்கவே
வார்கன்னி யெழுவர்க்கும் விருப்பமாய்
பச்சைப் பாளை முப்பழம்
விதமுடன் வைத்து வேண்டிக்கோ

தீர்க்கமாக.................ஐய்யனாருக்குச் சிறக்கும்
குதிரைக ளெடுத்து வைத்து
நீநிற்க பூசனை செய்யடி
மூர்க்கமா இயாரு மங்கிலி யக்காரி
முன்னே வந்துதடுக் கிறாளொரு
முத்துவர்ணக் கலை கொண்டுவை

இன்பமா எந்தன் வங்கணச் சிங்கனுக்
கேற்ற கொங்கணிக் கச்சைதான் மிக
எடுத்து வந்தேன் தன்முன்னே வை
அன்புடனே நாதன்குஞ்சுக்குச் சிக்கெண்ணை
அள்ளியே மிக்க கொண்டுவா - குறி
அறிந்து சொல்லுறேன் கேளம்மே
தனதனதன தானன தானன. (58)

## விருத்தம்

சதுர்முகனை யோதிவைத்த முருகேசா
விராலிகிரி தன்னில் வாழும்
அதிரூபமான குறவஞ்சி யரேஒரு
வசனம் அன்பாய்க் கேளாய்
இதவுடநீசொன்ன வஸ்துவகை களெல்லாம்
கொண்டு வந்தேன் இன்பமாகத்

துதிசெய்து குலதெய்வத்தை வேண்டி
எந்தன் மனக்குறியைச் சொல்லுவாயே.

(59)

## வசனம்

அகோவாரும் பெண்ணே! குறமகளே! நீகொண்டு வரச்சொன்ன வஸ்துவெல்லாங் கொண்டு வந்தேன் இனியுங்களுட குலதெய்வங்களை வேண்டிக்கொண்டு என் மனதில் நினைத்திருக்கிற குறியைச்சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே யெங்களுட குலதெய்வத்தை வேண்டிக்கொண்டு குறிசொல்லுகிறேன் கேளீரியம்மே.

## அகவல்

நீகுறைகமலம் நிறைந்த பொன்மகளே
சீர்வளர் மகளே செழிக்கும் மீனாட்சி
காந்திமதி யெனும் கருணா கடாட்சி
சேந்தனைப் பெற்ற சிவ்காமி யம்மே
அங்கயல் கண்ணி அகிலாண்ட தேவி
இங்கிதமாக இலங்கு காமாட்சி
வளர்விசாலாட்சி மகாபூ தனாட்சி
ஏழ்மையாய் வளரும் எக்கால தேவி
தரணியோர் புகழும் தய்ய...............
...........................க்க கொடுக்கும் மட்டுவார் குழலி
செகதலம் புகழும் செல்லாண்டி யம்மா
அகமகிழ் எழிலரசி அயி மாகாளி

மாரிமுத்த.............பேருடன் வளரும் பெரியநாயகியே
வீரமாமலையில் விளங்கு கன்னியரே
பார்புகழ் மாவைப் பதிவளர் கருப்பர்.....
ஆன...........ரும் அய்யனாரப்பா
ஊனையூர் தன்னிலுகந்த சாத்தாவே
உள்ளூர் பிடாரி ஓங்கார தேவி
வள்ளி தெய்வானை வடிவேல் முருகா
முன்னடிக் கறுப்பா முறங்க மாமுனியே
மின்னியே வளரும் வீரபத்திரனே

ஓங்கியதோர் உளரய்ய னாரே
பாங்குடன் வளர் திருப்பாண்டி ஈஸ்வரரே
பண்புடன் விரா லூர்ப் பதியீஸ்பரரே
வண்மை சேர்மாயா வடுக வைரவனே
சித்தி வினாயகர் செல்வக்கணபதி
அத்திமா முகனே ஐந்துகைய் யோனே
யாவரும் வந்து அன்புடன் கூடித்
தெய்வக் குறத்தினான் செப்பிய வார்த்தை
பழுது வராமலென் பக்கத்தி லிருந்து
வளமிகு செவ்வால மோகினியாள்
கருத்தினில் நினைத்த காரியங் கண்டு
வருக்கமாய்ச் சொல்லும் வரன் தருவீரே. (60)

அகவல் முற்றும்.

## வசனம்

இப்படிகுல தெய்வத்தை வேண்டிக்கொண்ட குறத்தியுடன் மோகினி வருகிறவிதம் பராக்கு.

# தரு

செண்டுமுலை ரெண்டு மின்ன தண்டை கலின்கலீலென்ன
வண்டுநிகர் குறவஞ்சி முன்மோகினி வந்தாள் -
கஞ்சமல ரிலங்கு முந்தன் கைபார்க்க வாராய்
கனகரத்தினத் தொடிபுனையுங் கையி பார்க்கவாராய்
அன்னமே உன்னுடைய கைசெல்வத் தைய்யே
அழகுமண வாளன்தனை அணைந்து வாழும் நின்கை
சொர்ண நவரத்தினங்களும் சொரிந்தருளும் நின்கை
துலங்கிவளர் தெய்வந்தனை துதித்தருளும் நின்கை
அந்தணர்க்கும் யாசகர்க்கும் அருளுதவும் நின்கை
அனங்கொடுத்து யாவரையும் ஆதரிக்கும் நின்கை
செந்தமிழ்சேர் வாணருக்குஞ் செல்வந்தரும் நின்கை
செழித்து வளர அந்தருவுஞ் சிறந்திலங்கும் நின்கை
வந்தவர்க்கெல்லாம் அதிக வாழ்வுதரும் நின்கை
வாஞ்சையுடன் வீணை...........வைத்து வாசிக்கும் நின்கை
சிந்தையுடன் கனவரிசை செய்தருளும் நின்கை
செகமுழுதும் அதிகசெங்கோல் செலுத்தி வாழும் நின்கை
............உன்னுடைய கையில் நல்லரேகை
கனமான தனரேகை கதித்த செல்வமுண்டாம்
இன்றுஞ் சங்கரேகை இந்தரேகை நல.................
கலங்கறானைப் பணிய விளங்கி வாழ்வாயம்மே
பொங்கமாகப் பின்னும் பறபரேகை இருப்பதனால்
புவியிலிந் திராணி செல்வம் பொருந்தி வருமம்மே
இங்கிதம்சேர் மச்சரேகை இருப்பதினாலே
இலங்கு பூஷணவகையறெல்லாம் சேருமம்மே
மிககட மருகரேகை விளங்கி இருப்பதனால்
மிகுந்த வித்தை யுன்னிடத்தில் மேன்மை யுண்டாமம்மே
சக்ரரேகை கைத்தலத்தில் தரித்திருப்பதாலே
தரணியெங்குமொரு குடைக்குள் தானாள்வாயம்மே
அன்னரேகை உன்கரத்தில் மின்னுவதனாலே

அன்னதானம் எந்நாளும் அதிகஞ் செய்வாயம்மே
தன்மையாய்ப் புத்திரரேகையை தளைத்திருப்பதாலே
சகலகலை அறிந்த புத்திர சம்பத்துண்டாமம்மே
அந்தமான வித்தைரேகை அடுத்திருப்பதாலே
அழகுமண வாளன்தனை அணைந்து வாழ்வாயம்மே
இந்த பூரணரேகை இலங்கி யிருப்பதனால்
இந்திரனிந் திராணிபோல என்றும் வாழ்வாயம்மே
அரன்மகிழும் உமைகரத்தில் அன்னரேகையுண்டு
வரமுதவும் லஷமிக்க ரேகையுண்டு
தரைபுகழும் வித்தைரேகை ஸத்யபாமைக்குண்டு
சீரலங்கும் பற்பரேகை சீதைகையிலுண்டு
செழிக்கும் இந்திராணி கையில் சிறக்குந் தனரேகை
பேரானரேகை யெல்லாம் உனக்கிருப்பதாலே
பிரபலமாய் அவர்களைப்போல் பேர்பெறுவாயம்மே.

(61)

## விருத்தம்

எந்தனுட கையிலுற்ற ரேகையெல்லாங்
கண்டுரைத்தாய் இன்ப மாக
சுந்தரஞ்சேர் விராலிகிரி மீதில்
வளர்குறமாதே சொல்லக் கேளாய்
சிந்தையில்நான் நினைத்திருக்குங் குறியரெல்லாம்
நன்றாகத் தெளிந்து பார்த்து
விந்தையுட னறிந்துமின்ன குறியளென்று
தானுமிக விள்ளு வாயே. (62)

## வசனம்

என்கையிலுள்ள லட்சணமெல்லாம்
கண்டுரைத்த தெய்வக்குறத்தி நீயே

இனியென் மனதிலுள்ள குறிகளை
இன்னதென்று சொல்லும் பெண்ணே.

## மறுவசனம்

ஆனாலப்படியே உன்னுடைய ..........உள்ளகுறிதனை
இன்னதென்று வகைவிபரஞ் சொல்லுகிறேன் கேளீரம்மே
ஒருநட்சத்திரம் சொல்வீரியம்மே - திருவோண நட்சத்திரம்
ஒருராசி சொல்லு அம்மே - மகரராசி
ஒருபூ சொல்வீரியம்மே - கடப்பம்பூ
ஒருமலை சொல்வீரியம்மே - விராலிமலை
கண்டுண்டேன் கண்டுண்டேன் கண்டுண்டே னரீயம்மே.

## தரு

மானேஉனது நினைவெல்லாம் கண்டு
நானே சொல்லுறேன் கேளும்
விராலிமலை யிலுள்ள வேலர்மீதி லுனக்கு
மையல் காணுதம்மே

திருவோண நட்சத்திர மென்ற
சீரையெண்ணிப் பார்க்க உன்னுட
சிந்தை யுகந்த கந்தனைக்
கூடிச்சேரத் தோணுதம்மே

ராசிமகர மென்று சொன்ன
ராசியைக்குறி பார்க்கும் வேளை
நேசமாய்க் கந்தர்மீதி லுனக்கு
ஆசை காணுதம்மே

கடப்பம்பூவென்று சொன்ன
வார்த்தையைக் கருத்தி லெண்ணிப்
பார்க்கும்வேளை கந்தர்மீதி லுனக்கு
மிகுந்த காதல் காணுதம்மே.

மகிழ்ந்து விராலி மலையைச்
சொன்ன மலையைக் குறிபார்க்க
வந்தமலை யில்வேலர் மார்பில்
கடப்ப மாலை சூடுதம்மே

வானவர் சிறைவிடுக்குந் தேவனவர்
வாக்கருள் கொடுக்கும் தேவன்
வடிவே லாயுத முருகன்
மயில்மேல் வரவு காணுதம்மே. (63)

## வசனம்

அகோவாரும் பெண்ணே! குறமகளே!
வானவர்கள் தம்பிரானான மயில்வாகனக் கடவுள்
மீதினாசைகொண்ட குறியைக் கண்டு சொன்னதினாலே
நீதெய்வக்குறத்தி என்கிறதுக்கு ஐயமில்லை .
ஆசைதந்த பிராணநாதனைக் கலந்துகூட
வருவதெப்ப சொல்லும் பெண்ணே.

## தரு

வருவதெப்பவென்று முகுந்தன் வாய்திறக்கு முன்னே
வலத்தி ...........கன்னிது ம்மல்வரத்தாய் காணுதம்மே
பக்கச்சொல் வந்தாரென் நிபகருதடி யம்மே
காகம் வந்து ஆளவாத்தில் கதறுவதினாலும்
வாகுபெ..........கனவடிவேல் முருகேசன் வந்தார்
வந்தாரென்றறிப்ப மதிளத்து சொல்லு தம்மே

சந்தோஷமாய்ச் சகுனஞ் செ......யந்தனிற் பாங்கி
சண்முகவர் மார்பில் கடப்பந்தார் வாங்கியே
வந்தாளவந்த திருக்கடம்ப மலர்மாலை தனைக்கரத்தில்
வாங்கி நன்றாக மனமீறி மிகமகிழ்ந் தாழ்வே.

(64)

## வேறுதரு

மகிழ்ந்து மாலிகைதனை மலர்க்கண்ணில் வைத்து
முலைமார் பிலணைத்து மெத்த மனமீறி
மகராச யோகமெல்லாம் வந்ததென் றின்பமாக
மாதுமோகினி நல்லவாஞ் சையுடன் குறிதனைக்
கண்டுரைத்த குறவஞ்சிப் பெண்மனது
குளிர் சந்தனம் பூசிக்கொண் டாடி
பிரியமுடனே நல்லபீதாம்பரமும்வர்ணப்
பிடவை சாலுவை யரும்பேரான ஆடையா
பரணமெல்லாம் அதிக வெகுமானஞ் செய்தழகாய்
நவமணிகள் உத்தியபொற் கூடையுஞ்
சிங்கனுக்குக் கொங்கணிக் கச்சையளுங் குடுத்துக்
குறத்திதனை அனுப்பி வைத்தார். (65)

## சிங்கன் வருத்தம்

மிக்க சல்லடந் தரித்துக் கச்சைக்கட்டி
மெய்தனி பூஷணங் களெல்லாம் மின்னவேதான்
கொச்சிறகை சிகையில் மீதில்சூடிக் கொண்டு
குளுந்த சவ்வாதணிந்து மிகக்குருகு சேரக்கண்ணிக்
கோர்வையெல்லாந் தோளில்போட்டு சண்முகவர்
விராலிகிரிதனை நாட்டில் தொக்குடனே குறுகினங்கள்
வேட்டையாடத் துடியானக் குறச்சிங்கன் தோன்றினானே.

(66)

## தரு

சிங்கன் வந்தானே துரைக்குறச்
- சிங்கன் வந்தானே

சங்கரி ஈன்றருள் பாலனுமாகிய
சண்முகவேலர் தளைத்திடு நாட்டினில்
- சிங்கன் வந்தானே

முண்டமுழியும் முறுக்கிய மீசையும்
முட்டிக்கால் தட்டியே மொண்ணை மூக்குச்
- சிங்கன் வந்தானே

பெத்தண்ணி தாக்கி பெருத்த வயிறுடன்
வாழ்த்திடு கொண்டை மலரசைந்தாட
- சிங்கன் வந்தானே.

(67)

## வேறுதரு

கொண்டையில் கொச்சிறகைச் சூடிவண்டத்தினம்
போமது விட்ட மதப்பயல் சிங்கனுந் தோன்றினானே

கள்ளு குடித்து.............யறாந் தானெடுத்து
வெள்ளைப்பல் தன்னைக் காட்டி நல்ல
வேடிக்கைச் சிங்கனுந் தோன்றினானே

வானவர் .............விராலிமலை வடிவேலவர் நாட்டில்
தேன்மொழிச் சிங்கிதனை அணையத்தேடிச்
சிங்கனும் வந்து தோன்றினானே. (68)

## விருத்தம்

மிக்கவே விளங்கு கீர்த்தி விராலியில் வேலர்நாட்டில்
திக்கல்வாய்ச் சிங்கன் காணச் சிங்கத்தின் குட்டிபோல

பக்குடன் பறவைக் கெல்லாம் பாங்குடன் கண்ணிகுத்திக்
கொக்குகள் கவர்சிங்க னுக்குங் குளுவனும் நானடய்யே.

(69)

## தரு

சிங்கனும் நானே மதப்பயல்ச் சிங்கனும் நானே
சிங்கனும் நானே
சிறந்து வளர்ந்து சுகந்தமறிந்து
மிகுந்து மகிழ்ந்து நிறைந்து
பொருந்தி யிருந்துறு கந்தருக்கந்த
விராலி நலந்தரும் நாட்டினில்
சிங்கனும் நானே.

(70)

## கலிப்பா

மன்றலந் தாரசைய நடமாடி வந்த சிங்கனுந்தான்
நன்றிதரும் விராலிகிரி நாட்டில் வயல் குளத்தில்
துன்றுங் கயலினத்தைத் தொனியா யினரை வந்துகொத்தி
தின்று வந்து சேர்குருகின் சேனைதனைக் கண்டானே.

(71)

## கண்ணிதரு

கண்டநடய்யே பறவைகள் கண்ட நடய்யே
கண்டநடய்யே விராலியில் வேலர்
கருத்துமகிழும் குறிச்சி வயல்தனில்
மண்டிய கொக்குப்பவளக் காலநாரையு
மானங்கவர்ந் தெதிர்வந்தது போலவே
- கண்டநடய்யே

வருகுதய்யே பறவைகள் வருகுதய்யே
வருகுதய்யே வருகுதய்யே விராலி வடிவேலர்
.............மாதர்குடி வயல்தன்னில் கருநிற
நாரையுஞ் செந்நாரை வெண்ணாரை
கம்புகளி னங்களும் கும்பலாகவே
- வருகுதய்யே

சேருதய்யே பறவைகள் சேருதய்யே
சேருதய்யே விராலியில் வேலர்
செழித்து மகிழுங் குளத்து வயலுக்குள் -
தாராவு மன்றிலுங் கூழைக்கடாக் கொக்குஞ்
சுங்கிச்சு மொருமச்சு மொச்சுக்கொண்டு
- சேருதய்யே

மெய்யினுமய்யே இனங்குடி மெய்யினுமய்யே
இனுமய விராலியில் வேலவர்
வேடிக்கை சொல்ல........பாடிக்குளத் தினில்
சாயுங் கொக்குத்திரள் பாயுங்க.........லதனைத்த
திக்கொத்தி விக்கிக்கிக்கிக் கிக்கீயென் று
- மெய்யினுமய்யே

கெம்பாடய்யே பொருபொரு கெம்பாடய்யே
கெம்பாடய்யே விராலியில் வேலர்
செழுங்குத்த குடிவயல் தன்னிலே
கும்புகும்பாகவே உள்ளானுந் தராவுங் கொக்கும்
மென்கண்ணிக்குள் சிக்கிதேடிக்க வருகுது
- கெம்பாடய்யே

கெம்பாரய்யே மொருமொரு கெம்பாரய்யே
கெம்பாரய்யே விராலியில் வேலர்
தேடிசேரும் தென்னங்குடி வயல்தன்னிலே

சம்பானகொளியங் கூளைக்கிடாக் கொக்குஞ்
சாரிசாரியாகத் தானும் வருகுது
- கெம்பாரய்யே

சிக்கிச்சடய்யே ....... பறவைகள் சிக்கிச்சடய்யே
சிக்கிச்சடய்யே ....... விராலியில் வேலவர்
சிராய் வளர்சினைத் தோரய்யல்தனில்
கொக்குடனாரை பார்க்கவு தாரியுங் கூளைக்கிடாக்
கொக்கும் கொள்ளைக் கொள்ளையாக
- சிக்கிச்சடய்யே
(72)

## விருத்தம்

திருத்திய கண்ணி தன்னில் சிக்கிய பறவை யெல்லாங்
கருத்துட னெடுத்து வந்து கறிசமைத் துண்ண வேண்டி
உருத்துடன் சிங்கி தன்னை உகந்து காணாமல் தேடி
வருத்தமாய்ச் சிங்கன் தானும் மனைமிக வருந்து வானே.
(73)

## தரு

சிங்கியைக் காணேனே என்வங்கனச்
சிங்கியைக் காணேனே
சிங்கியைத் தேடினா னெங்கும் காணாமலென்
சிந்தை மயங்கி யுருகுது போங்க
மிகுந்திடு மங்கை பிறகேகுறி சிங்காரமாய்
சொல்லி யெங்கே இருக்காளோ - சிங்கிக்
கச்சுமுலை ரெண்டும் பச்சிள நீரென்
மெச்சிமிட மகிழ்ந்திச்சை யாய்த்தானே
வாகட்டழகி தன்னைக் கிட்டஅழைத் துத்தான்
சட்டாவாய்க் கூடியே கட்டிச் சுகித்தாரோ ...
- சிங்கியைக் காணேனே. (74)

## வேறுதரு

சிங்கிக் கடையாளம் சொல்லுறேன் கேளுங்கடய்யே
அவள் செண்டுமுலை ரெண்டும் பந்தமுவு .............ய்யே
நல்ல சித்தசன் மோகம் வைத்தாசை யோகமெத்து
வைபோக .............உத்த சொல்ப்பாகம் - சிங்கி

செக்கச்ச ...............ண்ட குமரியடய்யே
அவள் தீர்க்கமுமார்க்கமும் யார்க்கும் வராது காணய்யே
வளர்சின்ன இடையாள் மின்னு துடையாள்
அன்ன நடையாள் பின்னு சடையாள் - சிங்கி

செந்திரு மேவும் விராலி முருகய்யா நாட்டில்வளர்
தேன்மொழி மாதர்க்கெல்லாங் குறிசொல்லுஞ் சீமாட்டி
நல்லசிந்தூரந் தீட்டிச் செவ்விழி மீட்டிச்
சேர்ந்தம் பாராட்டித் துலங்கு வதன்னாட்டி - சிங்கிக்
கடையாளஞ் சொல்லுறேன் கேளுங்கடய்யே.

(75)

## கலிப்பா

மதிமயங்கி இப்படித்தான் வருந்துகின்ற சிங்கன் முன்னே
துதியாவு மயில் முருகர் துலங்குந் திருநாட்டில்
அதிகவடி வானபெண் கலங்க அன்பாய்க் குறியுரைத்து
இதவுடனே சிங்கியுந் தானின்ப முடன்வந் தாளே.

(76)

## ஏசல்தரு

இன்னேரந் தானும்நீ யெங்கை யிருந்தாயென் சிங்கி
நானெங்கே இருந்தாலும் நீசெய்வ தென்னடா சிங்கா

செய்வதென்ன வென்றுதீ ராட்டம் பேசாதே சிங்கி
சும்மா தீராட்ட முன்னுடன் பாராட்ட லாகாதே - சிங்கா

பாராட்ட லாமென்று பாசாங்கு பேசாதே சிங்கி
அந்த பாசாங்கு செய்வதுன்சாதித் தொழிலடா சிங்கா

சாதிபேதகமாய்ச் சாதினைச் செய்யாதே சிங்கி
அந்தச் சாதினையுஞ் சூதுந்தானுக்கு வருஞ்சிங்கா

வருவதென்ன வுந்தன் மார்க்கமறி வேனான் சிங்கி
- ஆர்க்கும்
மடியில் கனங்கொண்டால் வழியிற் பயமுண்டு சிங்கா

உண்டானால் கொஞ்சத்தி லுன்னை விடுவேனா சிங்கி
சும்மா வண்டத்தின் மாதவாய் மதம் பேசாதே சிங்கா

வாதினை வித்தை வகையடி தயாதடி சிங்கி சும்மா
ஏதுக்கு ஆனமும் நீச்சுந்தான் காட்டுகிறாய் சிங்கா

பேச்சுக்கெல் லாமொரு ஆட்சேபம் பேசாதே சிங்கி
உனக்கு வாச்ச அருமைமுறி கொடுத்ததுண்டோ சிங்கா

கொண்டயச் சொருகின்ற கொத்துச் சல்லியேது சிங்கி
வடக்கு .......... பெண் தந்த முத்துத் தொங்கலடா சிங்கா

நெத்திமேல் செய்யாளை நீழ்விட்டவானேன் சிங்கி - மயல்
நிரையும் பாஞ்சிதரு ......... தினச் சுட்டிகாண் சிங்கா

வட்டநுதல் தனிலிட்ட கரியேது சிங்கி - நல்ல
வங்களப் பெண்தந்த பொங்கச்ச வாதடா சிங்கா

துத்திப்பூவை மூக்கில்வைத்த விதமென்ன சிங்கி
மிஞ்சுகமான நதிதரு மூக்குத் தளுக்கடா சிங்கா

காதினில் சூரியகாந்தப்பூ வேதடி சிங்கி - புகழ்
கதிக்கு மிந்திராணி கொடுத்தாற் றினத்தோடு சிங்கா

காக்காய்ப்பொன் பட்டத்தைய நெத்திணி வானேன் சிங்கி
- நல்ல
கச்சி மின்னார் தந்த வச்சிர கண்டசரி சிங்கா

சங்கங்கனிக் கோர்வை கொங்கை மீதணி வானேன் சிங்கி
- எங்கள்
சரசமோகனப்பெண் தருமுத்துத் தாவடஞ் சிங்கா

முள்ளிப்பழக் கோர்வைமுலை மீதலணி வானேன் சிங்கி
- எங்கள்
மோகமோகினி தந்தமோகன மாலைகாண் சிங்கா

கைதனிற் சுண்டைக் கனிக்கோர்வைக் கட்டேது சிங்கி
- எங்கள்
காதல்மோகினி தருங்கையக் கட்டுப்பவளங் காண் சிங்கா

மஞ்சநூலைப் பின்னி மார்பிலணி வானேன் சிங்கி
- விராலிமலை
முருகேசர் அருளுஞ் சரப்பணி சிங்கா

தனத்தைக் காவித்துணி தன்னால் கட்டுவானேன் சிங்கி
- தெய்வானை
தருசந்திர காவிச்சருகை ரவுக்கைகாண் சிங்கா

இடைதனி லஞ்சுகத் திறகைச் சேத்துடுப் பானேன் சிங்கி
- புகழ்
எங்களின்ப மோகினி மெச்சித்தரும் பச்சைஆடை
காண்சிங்கா

வெண்டையந்தனைக்காலில் விதமாயணி வானேன் சிங்கி- புகழ்
மீறுமோகினி தந்த வெள்ளிச் சிலமாடா சிங்கா
காலில் கிலுகிலுப்பைக் காயைச் சாத்தனை வானேன் சிங்கி
- மயல்
கதிக்குமோகினி தந்த காலிற் சதங்கைகாண் சிங்கா

புகழ்சேர விராலிநகர் மாதர் தனக்குக் குறிசொல்லி - நல்ல
சுகமாய் யெனக்கென்ன வரிசை கொண்டு வந்தாய் சிங்கி

சாலுவை கொங்கணிப் போர்வையும் ...............
பட்டுச்சல்லடங் கச்சைச் சரப்பணி முத்துத் துராயு
மேலுமை யான்பதக்க முமெங்குச் சுருமாலும் - உனக்கு
வேண்டும் பணமு மிகவுங் கொண்டுவந்தேன் சிங்கா

உன்னைச்சபாசியென்று கந்துநான் மெச்சுவேன் சிங்கி - நானும்
தன்னமை யாயுனங் மறுத்தாசை வைய்த்தெண்டா சிங்கா

இந்திரனிடு மைமுறி யுனக்குத் தாறேன் சிங்கி -நானும்
உனையல்லாலினி வேறொருவரை வேண்டேண்டா
சிங்கா

திருமகள் சேரும் விராலி முருகய்ய னாட்டில் - நல்ல
வரிசையாய்க் குறம்பாடி மகிழ்ந்துகூத் தாடுவோஞ் சிங்கா

கூத்தாடிக் கள்ளுக்குடித்து மகிழுவோஞ் சிங்கி - நன்றாய்
வாய்த்தரதியு மதன்போலுஞ் சேருவோஞ் சிங்கா

இந்திரானிந் திராணிபோலின்ப மதாகவேகூடி - என்றுஞ்
சொந்தமதாகச் சுகித்தூறி வாழுவோஞ் சிங்கா.

(77)

## விருத்தம்

செங்கமலத் திருமக ளென்னாளும் வாழி
தேசிகளுஞ் செனித்து வாழி
இங்கிதஞ் சேர்கலை மகளும் புவியும் வாழி
இறையவனும் பார்வதியும் இலங்கி வாழி
பொங்கமிகு சதுர்வேத மந்திரமும் வாழி
புண்டரீக மாலயனும் பொருந்தி வாழி
மங்களஞ்சேர் விராலிகிரி முருகர் வாழி
வள்ளி தெய்வானை என்றும் வாழிதானே.

(78)

## மங்களம்

மங்களஞ்செய மங்களம் நித்யசுப மங்களம்
மங்களஞ்சேர் விராலிகிரி முருகர் வாழி

சூரரை வென்ற வடிவுடைய வீரனுக்கும் மங்களம்
மகிழ்வுபெறு தீரனுக்கு மங்களம்
கயிலாச வாசரருள் குமரனுக்கு மங்களம்
கடப்பமலர் தாரனுக்குச் செயமங்களம்

சீலமறை வாணர்புகழ் சேரும்புவி நீதனுக்குங்
கோலமலர் பாதனுக்குங் குமரனுக்கு
நீலமயில் ஏறிவரும் நிறைந்தருளும் வேதனுக்கும்
ஞாலப்புகழ் விராலிகிரி நாதனுக்கும் செயமங்களம்

............................ளா அறுமுக விலாசனுக்கு
மருவுயரும் விராலிகிரி வாசனுக்கும்
பெருமைதரு நேசனுக்கும் பிறபல வுல்லாசனுக்கும்
வரிசையுடன் வளரு முருகேசனுக்கும்
செயமங்களம் நித்திய சுபமங்களம் -

ஐங்கரத் தானைக்கு மிங்கித மானுக்கு
மங்கை தெய்வானைக்கு மங்களஞ் செங்கை
இலங்கிய திருவடி வேலற்கு மங்களம் -
கந்தர்க்கு மங்களம் -மங்களமே. (79)

## சோபனம்

சோபனமே - செந்திலானுக்குச் சோபனமே
அயிலேறும் வேலனுக்கும்
அரனருளும் பாலனுக்கும்
மயிலேறுஞ் சீலனுக்கும்
வள்ளிபுணர் வேலனுக்குஞ் சோபனமே

கங்கையருள் குமரனுக்குங்
கடப்பமலர் தாரனுக்குந்
துங்கமயில் வீரனுக்குஞ்
சூரரைவென்ற தீரனுக்குஞ் சோபனமே

தொண்டர்க்கருள் நேயனுக்குந்
துலங்கும் வச்சிரகாயனுக்கும்
அண்டர்கள் சகாயனுக்கும்
அருமறைசேர் தூயனுக்குஞ் சோபனமே

நற்றமிழ்சேர் வாசனுக்கும்
நாதர்க்குப தேசனுக்கும்
வெற்றிமயி லேசனுக்கும்
விராலிமுரு கேசனுக்குஞ்
விராலிகிரி குமரகுருபரன்
துணையாக ரெக்ஷிக்கவேணும். (௮0)

## குறவஞ்சி நாடகம்

சீர்பூத்த கலைமகளும் ...........நிலைமகளுஞ்
செழித்து வாழுங்
கார்பூத்த மேருநகர் விராலி கிரிமேவு
திருநந்தா மீதில்
ஆர்பூத்த கும்பமுலைக் குறவஞ்சி நாடகத்தை
மகிழ்ந்து கூறத்
தார்பூத்த மாதுமை யாள்தந்தி தெந்திக்குஞ்
சாபபொற்றாள் காப்பாமே.

(௮1)

❁ ௐ ❁

# துணைநூற்பட்டியல்


1. சிற்றிலக்கியச் செல்வங்கள், (குறவஞ்சி இலக்கியம்) ந.வீ. செயராமன், மணிவாசகர்நூலகம், சிதம்பரம், 1967.

2. சுவடிப்பதிப்புநெறிமுறைகள், த.கோ. பரமசிவம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

3. சுவடியியல், பூ. சுப்பிரமணியன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

4. சுவடியியல் பயிற்சி - கையேடு, மு.கோ. ராமன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

5. தமிழில் குறவஞ்சி இலக்கியம், சு. சௌந்தரபாண்டியன், அலங்கார் பப்ளிகேஷன்ஸ், 321, என்.எஸ்.கே. சாலை, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை 24, 2000.

6. பதிப்பியல், அன்னிதாமசு, அமுத நிலையம் லிமிடெட், 7, ஸ்ரீபுரம் இரண்டாவதுதெரு, இராயப்பேட்டை, சென்னை-14, 1997.

7. பதிப்புக்கலை, அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை, 1979.

8. யாப்பதிகாரம், புலவர் குழந்தை, மங்கை அச்சகம், 25, மாவடி விநாயகர் கோயில்தெரு, இராயப்பேட்டை, சென்னை-14, 1959.

# பின்னிணைப்பு

# செய்யுள்முதற்குறிப்பகராதி


| வ.எண். | செய்யுள்முதற்குறிப்பு | செய்யுள்எண் |
|---|---|---|
| 1. | அடியார் | 50 |
| 2. | அண்டந் | 10 |
| 3. | அந்தணர்சூழ் | 15 |
| 4. | அம்மம்மே | 37 |
| 5. | அருமறை | 42 |
| 6. | அவனிதனில் | 45 |
| 7. | அன்னமே | 25 |
| 8. | அஷ்டதிக்கும் | 21 |
| 9. | இத்தனை | 54 |
| 10. | இன்னேரந் | 77 |
| 11. | எங்கள் | 39 |
| 12. | எந்தனுட | 62 |
| 13. | ஒசத்தி | 58 |
| 14. | கங்கை | 2 |
| 15. | கங்கையருள் | 40 |
| 16. | கண்டநடய்யே | 72 |
| 17. | கருனகையின் | 11 |
| 18. | கற்றறிந்த | 53 |
| 19. | குணமிடும் | 29 |
| 20. | கொண்டையில் | 68 |
| 21. | சங்குமுத்த | 22 |
| 22. | சதுமறை | 13 |
| 23. | சதுர்முகனை | 59 |
| 24. | சரணம் | 30 |
| 25. | சிங்கன் | 67 |
| 26. | சிங்கனும் | 70 |
| 27. | சிங்கி | 75 |
| 28. | சிங்கியை | 74 |

| வ.எண். | செய்யுள்முதற்குறிப்பு | செய்யுள்எண் |
|---|---|---|
| 29. | சிந்தையில் | 28 |
| 30. | சீர்பூத்த | 81 |
| 31. | சீரங்கம் | 47 |
| 32. | சீரிலங்கும் | 46 |
| 33. | சுந்தரமிகும் | 36 |
| 34. | சூர்தனை | 44 |
| 35. | செங்கமலத் | 78 |
| 36. | செண்டுமுலை | 61 |
| 37. | சோபனமே | 80 |
| 38. | சோலைதனில் | 49 |
| 39. | தமிழ்முனி | 18 |
| 40. | தருவுயரும் | 3 |
| 41. | தவமுனிவோர் | 6 |
| 42. | திருத்திய | 73 |
| 43. | திருமகளுங் | 35 |
| 44. | திருமருக | 57 |
| 45. | துய்யவெண் | 9 |
| 46. | தென்னவன்வாழ் | 52 |
| 47. | தேங்குயர் | 23 |
| 48. | தேசம்புகழ் | 4 |
| 49. | தேசமெங்கும் | 41 |
| 50. | நீகுறைகமலம் | 60 |
| 51. | பத்தர்தொழும் | 5 |
| 52. | பாற்கடலில் | 16 |
| 53. | புண்ணியநதி | 51 |
| 54. | பொன்மருவும் | 48 |
| 55. | மகிழ்ந்து | 65 |
| 56. | மங்களஞ்செய | 79 |
| 57. | மணிபுனை | 8 |
| 58. | மதிமயங்கி | 76 |
| 59. | மதுரை | 55 |
| 60. | மயிலடி | 7 |

| வ.எண். | செய்யுள்முதற்குறிப்பு | செய்யுள்எண் |
|---|---|---|
| 61. | மன்மதன் | 20 |
| 62. | மன்றலர்ந்த | 71 |
| 63. | மார்தே | 38 |
| 64. | மானேஉனது | 63 |
| 65. | மிக்க | 66 |
| 66. | மிக்கவே | 69 |
| 67. | மின்னணி | 19 |
| 68. | மின்னு | 56 |
| 69. | மையல்கொண் | 27 |
| 70. | மோகநான் | 24 |
| 71. | மோகனப் | 12 |
| 72. | வஞ்சி | 31 |
| 73. | வஞ்சி | 32 |
| 74. | வந்தனளே | 33 |
| 75. | வந்தாளய்ய | 34 |
| 76. | வருவதெப்பவென்று | 64 |
| 77. | வாசமிகும் | 17 |
| 78. | வாசமேவும் | 43 |
| 79. | வாலமோகினி | 14 |
| 80. | வேதமேவிய | 26 |
| 81. | வேதமா | 1 |



❖ ✻ ❖ ✻ ❖

# அருஞ்சொல்லகராதி

(பா : பாடல் அ : அடி வ : வசனம்)

அஞ்சுகெதி - பயப்படச்செய்யும் பாங்கு பா.8 அ.100
அஞ்சுகம் - கிளி பா.8 அ.74
அரவம் - பாம்பு பா.8 அ.12
அனுகூலன் - நண்பன் பா.7 அ.2
ஈஷபர்கள் - முனிவர்கள் பா.35 அ.5
ஐங்கரன் - ஐந்துகரத்தினையுடையோன் பா.1 அ.4
பா.2. அ.4
ஐந்தரு - பாக்கு, தென்னை, மா, பலா, வாழை என்னும் ஐந்து மரங்கள் பா. 8 அ.84
ஓதிமப்பிள்ளை- அன்னம் வ.6 அ.2
கடப்பமாலிகை- கடப்பமாலை பா.8 அ.98
கதித்தல் - கூறுதல் பா. 8 அ.24
கந்தம் - சந்தனம், மணமிகுந்த பொருள் வ.9 அ.2
களதை - பெருச்சாளி ; பெரிய எலி பா. 8 அ.102
கன்னல் - கரும்பு பா. 8 அ. 72
கனவர்மம் - வா்மக்கலைச்சாா்ந்த ஒரு குறிப்பு பா. 24 அ. 10
சந்தத்தம்பம் - இசைத்தூண், ஒலியெழுப்பும் தூண் பா.8அ.55
சுருபன் - அழகன் பா.7 அ.4
சென்னல் - உயர்ந்தவகை நெல் பா.8 அ.71
சேந்துமாளிகை- முருகனின் மாளிகை ;சேந்தன் - முருகன், அரசன் என்றும் பொருள்படும். பா.8 அ.45
தனஞ்செயன் - அக்கினி பா.16 அ.5
திலதம் - நெற்றிப்பொட்டு, திலகம் பா.29 அ.40
நத்தி - விரும்புதல் பா.5 அ.3
நலமுறு கிழிகள் - நலமிக்க பரிசுகள் பா. 8 அ. 15
நன்பு - அன்பு பா.12 அ.10
நாரியர் - நங்கையர் பா.12 அ.10

பங்கயம் - தாமரை பா.7 அ.5
பட்சம் - பக்கம், சிறகு பா.8 அ.23
பணி - அணிகலன் பா.32 அ.7
பழனம் - வயல் பா.8 அ.70
பவுரி - ஒரு பெரும்பண், கூத்துவகை பா.8 அ.164
பொருப்பு - மலை பா.8 அ.110
மருப்பு - யானைத்தந்தம், கொம்பு பா.8 அ.110
மலருரை அளிகள் - பூவில் உறையும் தேன் பா.8 .15
மிஞ்சுகுதி - வீரநடை பா.8 அ.100
மிஞ்ஞை - மயில் பா.13 அ.2
முளரிமுத்துதிர- தாமரைமலர் மேல் படும் நீர்த்துளி உதிர பா.8 அ.48
மௌ - மௌனம் பா.5 அ.3
வழுத்துதல் - வருத்துதல் பா.23 அ.4
வாகுபன் - திண்தோளன் பா.8 அ.149
விண்டமலர் - விரிந்தமலர் பா.25 அ.10
விஸ்தாரன் - ஓங்கிய பெருமையுடையோன் பா.8 அ.79

♦ ♓ ♦ ♓ ♦

# குறவஞ்சி நூல்கள் - பட்டியல்

| வ.எண். | நூல்கள் | பாடியோர் |
|---|---|---|
| 1. | அமரவிடங்கன் குறவஞ்சி | .................... |
| 2. | அர்த்தநாரீசர் குறவஞ்சி | .................... |
| 3. | அழகர் குறவஞ்சி | கவி குஞ்சரபாரதி |
| 4. | அன்னதானமடத்துக் குறவஞ்சி. | சுப்பிரமணியக்கவிராயர் |
| 5. | அனலைத்தீவுக் குறவஞ்சி | முத்துக்குமாரப்புலவர் |
| 6. | ஆரோக்யமா குறவஞ்சி | அப்சலேம் பிள்ளை |
| 7. | ஆதிமூலேசர் குறவஞ்சி | தில்லைவிடங்கன் மாரிமுத்தா பிள்ளை |
| 8. | இராமபத்திரமூப்பனார் குறவஞ்சி | க. சுப்பராமய்யர் |
| 9. | இராஜ மோகனக் குறவஞ்சி | கிரிராஜகவி |
| 10. | இரிஷிவந்தக் குறவஞ்சி | இராசப்பன் - இராசப்ப உபாத்தியாயர் |
| 11. | இலக்ஷமணக் குறவஞ்சி | முனியப்ப முதலியார் |
| 12. | ஓதாளர் குறவஞ்சி எனும் அலகுமலைக் குறவஞ்சி | சின்னத்தம்பி நாவலர் |
| 13. | கச்சபேசுவர் குறவஞ்சி | விச்சூர்தாமோதரமுதலியார் |
| 14. | கச்சாய்க் குறவஞ்சி | ஜமாப்பாண முதலியார் |
| 15. | கச்சேரி முதலியார் குறவஞ்சி | இன்பக்கவி |
| 16. | கண்ணப்பர் குறவஞ்சி | .................... |
| 17. | கதிரைமலைக் குறவஞ்சி | .................... |
| 18. | கபாலீச்சுரர் குறவஞ்சி | .................... |
| 19. | காங்கேயன் குறவஞ்சி | .................... |
| 20. | காயாரோகணக் குறவஞ்சி | அழகுமுத்துப் புலவர் |
| 21. | காரைக் குறவஞ்சி | யாழ்ப்பாணம் சுப்பையர் |
| 22. | கிருஷ்ணமாரிக்குறவஞ்சி | .................... |

| வ.எண். | நூல்கள் | பாடியோர் |
|---|---|---|
| 23. | குமாரலிங்கக் குறவஞ்சி | ...................... |
| 24. | கும்பேசர் குறவஞ்சி | பாபநாசமுதலியார் |
| 25. | குறவஞ்சி | தாமோதரக்கவிராயர் |
| 25. | குறவஞ்சி (தெலுங்கு) | ...................... |
| 26. | குறுக்குத்துறைக் குறவஞ்சி | தி.சு.ஆறுமுகம் (சிவதாசன்) |
| 27. | குன்றாடிக்குறவஞ்சி | வீரபத்திரக்கவிராயர் |
| 28. | கூட்டுறவுக் குறவஞ்சி | தஞ்சைவாணன் (துரை சீனிவாசன்) |
| 29. | கொடுமரூர்க் குறவஞ்சி | நல்லவீரப்பப்பிள்ளை |
| 30. | கொடுமுடிக் குறவஞ்சி | ...................... |
| 31. | கோமாசிக் குறவஞ்சி | சா. து. சி. யோகி |
| 32. | சந்திரசேகரக் குறவஞ்சி | ...................... |
| 33. | சரபேந்திரபூபாலக் குறவஞ்சி | சிவக்கொழுந்துதேசிகர் |
| 34. | சாப்டூர் குறவஞ்சி | நகரமுத்துசாமிக் கவிராயர் |
| 35. | சாஹாஜிராசர் குறவஞ்சி | முத்துக்கவி |
| 36. | சிக்கல் நவநீதஸ்வாமி பேரில் குறவஞ்சி | சொக்கலிங்கம்பிள்ளை |
| 37. | சிதம்பரக் குறவஞ்சி | செல்லப்பப் பிள்ளை |
| 38. | சிதம்பரக் குறவஞ்சி | ...................... |
| 39. | சிவபெருமான் குறவஞ்சி | தாமோதரக் கவிராயர் |
| 40. | சிவன்மலைக் குறவஞ்சி | தே. இலட்சுமணபாரதியார் |
| 41. | சிற்றம்பலக் குறவஞ்சி | கே. என். தண்டாயுதபாணி |
| 42. | சுவாமிமலை முருகன் குறவஞ்சி | இலிங்கப்பையர் |
| 43. | செந்தில் குறவஞ்சி | ...................... |
| 44. | சேற்றூர் முத்துச்சாமித்துரை குறவஞ்சி | இராமசாமிக்கவிராயர் |
| 45. | சோலைமலைக் குறவஞ்சி | கிருஷ்ணய்யங்கார் |
| 46. | சோழக் குறவஞ்சி | கம்பர் |
| 47. | ஞானக் குறவஞ்சி | குமரகுருபரதேசிகர் |
| 48. | ஞானரத்தினக்குறவஞ்சி | பீருமுகம்மது சாகிபு |
| 49. | டெல்லிக் குறவஞ்சி | ...................... |

| வ.எண். | நூல்கள் | பாடியோர் |
|---|---|---|
| 50. | தஞ்சைக் குறவஞ்சி | ................... |
| 51. | தஞ்சைக் குறவஞ்சி | ................... |
| 52. | தஞ்சைவெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி | ................... |
| 53. | தத்துவக் குறவஞ்சி | முருகேசப் பண்டிதர் |
| 54. | தமிழரசி குறவஞ்சி | அ. வரதநஞ்சைய பிள்ளை |
| 55. | திருச்செங்கோட்டுக் குறவஞ்சி | ................... |
| 56. | திருநீலகண்டர் குறவஞ்சி | சாமிநாதய்யர் |
| 57. | திருப்பாகையூர்க் குறவஞ்சி | ................... |
| 58. | திருப்போரூர்க் குறவஞ்சி | சபாபதி முதலியார் |
| 59. | திருமணக் குறவஞ்சி | ஆ.சுப்பிரமணியக் கவிராயர் |
| | திருமயிலைக் குறவஞ்சி | யாழ்ப்பாணம் வீரமணி |
| 60. | திருமலையாண்டவர் குறவஞ்சி | ................... |
| 61. | தியாகேசர் குறவஞ்சி | ................... |
| 62. | திருவாரூர் குறவஞ்சி | ................... |
| 63. | திருவிடைக்கழிக் குறவஞ்சி | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 64. | துரோபதைக் குறவஞ்சி | ................... |
| 65. | தேவேந்திரக் குறவஞ்சி | தஞ்சை சரபோஜிமன்னர் |
| 66. | நகுலமலைக் குறவஞ்சி | விசுவநாத சாஸ்திரியார் |
| 67. | நகுலமலைக் குறவஞ்சி | சேனாதிராய முதலியார் |
| 68. | நல்லைக் குறவஞ்சி | சேனாதிராய முதலியார் |
| 69. | நல்லைநகர்க் குறவஞ்சி | ப. கந்தப்பிள்ளை |
| 70. | நவபாரதக் குறவஞ்சி | ச.து.சு. யோகியார் |
| 71. | நெல்லைக் குறவஞ்சி | தொண்டைமான் முதலியார் |
| 72. | பழனிக் குறவஞ்சி | வே. முத்தனாச்சாரியார் |
| 73. | பாண்டிக்கொடுமுடிக் குறவஞ்சி | ................... |
| 74. | பாம்பணகவுண்டன் குறவஞ்சி | பாலபாரதி |
| 75. | பிரகதீஸ்வரர் குறவஞ்சி | சிவக்கொழுந்துதேசிகர் |
| 76. | பிலிப்பு விராட்ரிக்கோ முத்துகிருட்டிணகுறவஞ்சி | இன்பக்கவி |
| 77. | பெத்லகேம் குறவஞ்சி | வேதநாயக சாஸ்திரியார் |
| 78. | பெம்பண்ணக்கவுண்டர்குறவஞ்சி | அருணாசலக்கவிராயர் |

| வ.எண். | நூல்கள் | பாடியோர் |
|---|---|---|
| 79. | பொங்கலூர்க் குறவஞ்சி | பிரமயனப்புலவர் |
| 80. | பொய்யாமொழியீசர் குறவஞ்சி | சிதம்பரத்தத்துவலிங்கையர் |
| 81. | மண்ணிப்படிக்கரைதிருநீலகண்டர் குறவஞ்சி | சாமிநாதய்யர் |
| 82. | மருங்காபுரிச்சிற்றரசர்குறவஞ்சி | வெறிமங்கைபாகக் கவிராயர் |
| 83. | மருதப்பக்குறவஞ்சி | பிலிப்பு. தெ. மெல்லோ |
| 84. | மல்வில் குறவஞ்சி | வெற்றிவேலுப்புலவர் |
| 85. | மாத்தனைமுத்துமாரியம்மன்குறவஞ்சி | .................. |
| 86. | மாந்தைக் குறவஞ்சி | வீரபத்திரக்கவிராயர் |
| 87. | முத்தானந்தர் குறவஞ்சி | ஆற்றூர் முத்தானந்தர் |
| 88. | முத்துச்சாமித்துறைக்குறவஞ்சி | முகவூர் கந்தசாமிக்கவிராயர் |
| 89. | முருகக்கடவுள் குறவஞ்சி | இலிங்கப்பையர் |
| 90. | முருகர் குறவஞ்சி | நல்லவீரப்பப்பிள்ளை |
| 91. | மெய்ஞ்ஞானக்குறவஞ்சி | முகம்மது |
| 92. | யாழ்ப்பாணத்துச்செல்வர் குறவஞ்சி | இன்பக்கவி |
| 93. | வண்ணக்குறவஞ்சி | விசுவநாதசாஸ்திரியார் |
| 94. | வண்ணவைத்திலிங்கக்கவிராயர் | கணபதிஐயர் |
| 95. | வருணாபுரிஆதிமூலேசர்குறவஞ்சி | மாரிமுத்துப்பிள்ளை |
| 96. | வள்ளிக்குறவஞ்சி | .................. |
| 97. | வள்ளியம்மன் ஆயாலேட்டக்குறவஞ்சி | கந்தசாமி முதலியார் |
| 98. | வன்னிக் குறவஞ்சி | வெற்றிவேலு புலவர் |
| 99. | வாதசெயக்குறவஞ்சி | .................. |
| 100. | விராலிமலைக்குறவஞ்சி | பிள்ளைப்பெருமாள் கவிராயர் |
| 101. | வெங்கடசாமி நாயக்கர் | மாம்பழக்கவிச்சிங்கநாவலர் |
| 102. | வெங்களப்ப நாயக்கர் | அழகியசிற்றம்பலக்கவிராயர் |
| 103. | வைணவக் குறவஞ்சி | முருகேசராமானுச ஏதாங்கிசுவாமிகள் |
| 104. | வைத்தியக் குறவஞ்சி | கொங்கணர் |
| 105. | வையாபுரி குறவஞ்சி | ................ |
| 106. | ஸ்ரீகிருஷ்ணமாரி குறவஞ்சி | ஸ்ரீதேவி கருமாரிதாஸர் |

❖ ❖ ❖

T. 7068
T. 7068